பக்கங்கள்:-27

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | தை 24 | சனிக்கிழமை | 07.02.2026 | அதிர்வு 191

## மேலும் நீடிக்கப்பட்ட அவசரகாலச் சட்டம்

### நாடாளுமன்றம் அங்கீகாரம்



அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிப்பதற்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் 06

# இலங்கையை இந்தியா ஒருபோதும் கைவிடாது!

## மீண்டெழ உதவிகள் தொடரும் என்று ரில்வினிடம் ஜெய்சங்கர் உறுதிமொழி



இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார மற்றும் கலாசார உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் இதன்போது பேச்சு நடத்தப்பட்டது. 06

## கெஹலியவின் மகள் பிணையில் விடுவிப்பு



இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மூத்த மகளான சமித்ரி ரம்புக்வெல பிணையில் விடுவிக்கப்பட்டார். 06

## 2027 வரை எதுவும் இல்லை!

## போராட்டம் செய்தாலும் பயன் இல்லை என்றும் ஜனாதிபதி நேரடி அறிவிப்பு



வரும் 2027 ஆம் ஆண்டு சம்பள உயர்வு வரும் வரை, வேறு எந்தவொரு கொடுப்பனவும் அதிகரிக்கப்பட மாட்டாது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

டித்வா புயலினால் ஏற்பட்ட அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியேற்றும் முகமாக நேற்று 06




இன்று என் நண்பர் ஒருவர் சொன்ன கருத்தை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

அவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். என்னிலும் சற்று வயது கூடியவர். நான் அவரை நேரில் சந்திக்கவிட்டாலும் நீண்ட காலம் தொலைபேசி மூலம் உரையாடி நன்கு அறிமுகமானவர்.

சில தினங்களுக்கு முன்னர் அழைப்பு எடுத்தார். எடுத்த கையோடு "நாங்கள் யாழ்ப்பாணத்தவர்கள். முற்றிலும் அமெரிக்கர்களை ஒத்தவர்கள்." – என்றார் அவர்.

எனக்கு சற்றுப் புளகாங்கிதம். நம்மவரை அமெரிக்கர்களோடு ஒப்பிடுகின்றார் என்ற பெருமிதம் எனக்குள் எழுந்தது. ஆனால் அவர் தொடர்ந்து சொன்ன கருத்துக்கள் என்னை நிலைகுலைய வைத்தன.

"ஐஸே இண்டைக்கு உலகம் மூன்றாம் உலக யுத்தத்தின் விளிம்பில் நிற்கின்றது. எல்லா இடங்களிலும் பதற்றமும் குழப்பமும். இந்த நெருக்கடி நிலைக்கு முதல் காரணம் யார் 06








# அவசரகாலச் சட்டம் ஒருபோதுமே அடக்குமுறை கருவியாக மாறாது!

## ஜனாதிபதி அநுரகுமார உறுதி

மீள்கட்டியெழுப்பும் செயற்பாட்டை விரைவுபடுத்துவதற்காக மாத்திரமே அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டும் எனவும், அது ஒருபோதும் அடக்குமுறை கருவியாகப் பயன்படுத்தப்படமாட்டாது எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

ஊழல் அற்ற நிர்வாகம், ஜனநாயகம் மற்றும் பொருளாதார சுபீட்சம் பற்றி பேச முடியாத எதிர்க்கட்சியில் உள்ள சிலரின் ஒரே கோஷமாக இனவாதம் மாறிவிட்டது என்றும், வடக்கிலோ அல்லது தெற்கிலோ இனவாதம் மீண்டும் தலைதூக்க இடமளிக்கப்பட மாட்டாது என்றும் அவர் கூறினார்.

நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் கண்டி நியங்கொட பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற டித்வா சூறாவளியால் வீடுகள் முழுமையாக சேதமடைந்த மற்றும் மண்சரிவு அபாயத்தில் உள்ளதாக அடையாளம் காணப்பட்ட குடும்பங்களின் மீள்குடியமர்த்துவதற்காகக் காணி வழங்குதல் மற்றும் வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிதி உதவி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

வீடமைப்பு திட்டத்தை ஆரம்பித்து வைத்தல் மற்றும் புதிய வீட்டின் நிர்மாணப் பணிகளைத் தொடங்குதல் ஆகியவற்றிலும் ஜனாதிபதி பங்கேற்றார்.

தும்பனை, ஹரிஸ்பத்துவ, ஹதரலியத்த, பூஜாபிட்டிய மற்றும் யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 146 குடும்பங்களுக்கு இந்த நிதி உதவிகள் வழங்கப்பட்டன.

அதன்படி, முதல் கட்டமாக, வீடுகளை நிர்மாணிப்பதற்காக இருபது இலட்சம் ரூபாவுக்கான காசோலைகளும், பகுதியளவு சேதமடைந்த வீடுகளைக் கொண்ட குடும்பங்களுக்கு அவர்களின் வீடுகளைப் பழுதுபார்ப்பதற்காக மூன்று இலட்சம் ரூபாவுக்கான காசோலைகளும், சேதமடைந்த வர்த்தகங்களை மீளமைப்பதற்காக இரண்டு இலட்சம் ரூபாவுக்கான காசோலைகளும் இதன்போது வழங்கப்பட்டன.

மேலும், நியங்கொட பிரிவேனா பாடசாலைக்கு கட்டடம் ஒன்றும் நன்கொடையாக வழங்கப்பட்டது.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க.

“நமது அரசியல் வரலாற்றில், ஒவ்வொரு அரசியல் மேடையிலும் மோசடி மற்றும் ஊழலை ஒழிப்பதே முக்கிய தலைப்பாக இருந்தது. முன்னாள் தலைவர்கள் அதற்காக பல்வேறு வாக்குறுதிகளை அளித்தனர். அதன்படி, நமது நாட்டில் அரசாங்கங்கள் மாறியபோது, மோசடி மற்றும் ஊழல் ஒரு முக்கிய தலைப்பாக மாறியது. நமது நாட்டின் அரசியல் மேடையில் மீண்டும் ஒருபோதும் மோசடி மற்றும் ஊழல் பற்றிய ஒரு முழக்கம் இருக்காது என்று நான் நினைக்கிறேன்.

மேலும், இந்நாட்டின் அரசியல் மேடையில் ஜனநாயகம் ஒரு முக்கிய தலைப்பாக மாறிவிட்டது. தேர்தல்களை ஒத்திவைப்பது, பத்திரிகையாளர்களைக் கொல்வது, வீதிகளில் இடம்பெறும் கொலைகள் பற்றிப் பேசப்பட்டது. இந்த நாட்டில் மீண்டும் ஒருபோதும் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படாது. அரசியல் மேடையில் மீண்டும் ஒருபோதும் ஜனநாயகம் பற்றிய முழக்கத்தை எழுப்ப வாய்ப்பு இருக்காது.

மேலும், அரசியல் மேடைகளில் பொருளாதார வீழ்சிச பற்றி தொடர்ந்து பேசப்பட்டது. நமக்கு வெளியே உள்ள அரசியல் கட்சிகள் மீண்டும் பொருளாதார வீழ்ச்சி மற்றும் நாட்டை வறுமையிலிருந்து மீட்டெடுப்பது பற்றிய முழக்கங்களை அரசியல் மேடையில் முன்வைக்க வாய்ப்பு இருக்காது என்று நான் நினைக்கிறேன். இந்த நாட்டில் வறுமையை நாம் ஒழித்து வருகின்றோம்.

மேலும், சர்வதேச உறவுகள் வலுவாக இல்லாததால் அரசாங்கங்கள் கவிழ்க்கப்பட்டுள்ளன. நாங்கள் மிகவும் வலுவான வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றுகிறோம். எனவே, பலர் இப்போது நாட்டுக்குச் சாதகமான அரசியல் கோஷங்களை இழந்துவிட்டனர். எனவே, அவர்கள் அதிகாரத்துக்கான ஒரே பாதையாக இனவாதத்தைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

இந்த நாட்டை எப்படிக் கட்டியெழுப்புவது என்பது குறித்த தொலைநோக்குப் பார்வை நமக்கு உள்ளது. எந்த நாட்டைக் கட்டியெழுப்பினாலும், அந்த நாட்டின் வரலாறும், அந்த நாடு எவ்வாறு கட்டியெழுப்பப்பட்டது என்பதும் முக்கியம். எந்த நாடும் அந்த நாடு கட்டியெழுப்பப்பட்ட அடித்தளத்தின் அடிப்படையில் அபிவிருத்தித் திட்டங்களையும் பொருளாதார உத்திகளையும் வகுக்கின்றன.

எனவே, நமது கடந்த கால பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டு, புதிய உலகத்துடன் இணக்கமான ஒரு புதிய

தொடர்ச்சி▼












# அவசரகாலச் சட்டம் ஒருபோதுமே அடக்குமுறை கருவியாக மாறாது!

## ஜனாதிபதி அநுரகுமார உறுதி

தொடர்ச்சி▲

பொருளாதார மாற்றத்திற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். இந்த பூமியில் வேரூன்றி, இயற்கையாக இணைக்கப்பட்ட ஒரு சமூகத்தை உருவாக்குவதன் மூலம் எங்கள் பொருளாதார உத்திகள் வகுக்கப்பட்டுள்ளன. எனவே, பௌத்த மதம் பற்றியும் நமது வரலாறு குறித்தும் நம்மிடம் இருப்பது அரசியல் மேடையில் பாரிமாற வேண்டிய கோஷங்கள் அல்ல, நமது நாடு கட்டியெழுப்பப்பட்ட கடந்த காலத்துடன் தொடர்புகளைப் பேணி நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

இன்று, அரசுக்கு மாத்திரமே அரசியல், தொலைநோக்கு மற்றும் கருத்தியல் இருக்கின்றது. இறைச்சி துண்டைச் சுற்றி கூடும் காகங்களின் கூட்டம் போல மற்றவர்கள் எந்த நேரத்திலும் வரும் ஏதோ ஒன்றை பிடித்துக்கொள்கின்றார்கள், ஆனால்நாங்கள்ஒருநல்லதொலைநோக்கு பார்வையுடன் செயற்படுகின்றோம்.

டித்வா சூறாவளி நமது நாட்டின் மக்களுக்கும் பொருளாதாரத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இவ்வளவு பெரிய பேரழிவு ஏற்படும் போது, நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் செயல்பாட்டில் சாதாரண சட்டம் போதுமானதாக இல்லை. ஒரு விசேட சட்டம் தேவை.

விசேட சட்டங்களை இயற்றுவதற்குத் தேவையான அதிகாரங்களை அரசமைப்பு வழங்குகின்றது. பொது மக்கள் பாதுகாப்புச் சட்டம் சிறப்புச் சட்டங்களை இயற்றுவதற்கான வாய்ப்பை வழங்குகின்றது. இது போன்ற பேரழிவிலிருந்து மீள்வதற்கு, சிறப்பு அதிகாரங்களுடன் கூடிய சட்டங்கள் தேவை. அதனால்தான் அவசரகாலச் சட்டத்தை விதித்தோம். ஆனால் வரலாற்றில், அவசரகாலச் சட்டங்கள் பெரும்பாலும் தொழிற்சங்க இயக்கங்களைப் பலவீனப்படுத்தவும், ஊடகங்களை அடக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்த நோக்கத்துக்காக நாங்கள் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தவில்லை. இந்தக் கட்யெழுப்பும் செயல்முறை இன்னும் முடிவடையாததால், அடிப்படைப் பணிகள் முடியும் வரை அவசரகாலச் சட்டத்தை நாங்கள் செயற்படுத்தி வருகின்றோம்.

அது ஒருபோதும் அடக்குமுறைக்கான கருவியாகப் பயன்படுத்தப்படாது என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். எனவே, கொள்வனவு செயல்முறை, விலைக்கு வாங்குதல் மற்றும் காணி கையகப்படுத்துதல் ஆகியவற்றை விரைவுபடுத்துவதற்கும், அரச அதிகாரிகளுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கும் அவசரகாலச் சட்டத்தை மீண்டும் நீடிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும், மிக விரைவாக மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டிய பகுதிகளுக்கும் தேவையான சட்டப் பாதுகாப்பை நாங்கள் வழங்கி வருகின்றோம். இது ஒருபோதும் அடக்குமுறைக்கான கருவியாகப் பயன்படுத்தப்படாது.

நமது நாடு வீழ்ச்சியடைய வேண்டும் என்று விரும்பும் ஒரு குழு உள்ளது. ஆனால், எந்தவொரு பேரழிவையும், எந்தவொரு சரிவையும் தாங்கக்கூடிய நாடாக இந்த நாட்டை நாம் உருவாக்குகின்றோம். ஒரு பேரழிவுக்கு முகங்கொடுக்க, நாம் ஒன்றுபட வேண்டும். நாம் தனியாக நின்றால், நமது சக்தி பலவீனமாகும். நாம் ஒன்றுபட்டால், நாம் பலமடைவோம்.

எனவே, நம்மிடையே உள்ள உள்முரண்பாடுகளையும் மோதல்களையும் வென்று நம்மை ஒரே தேசமாக கட்டியெழுப்ப வேண்டும். நீண்ட காலமாக, உள்மோதல்களால் நாம் பலவீனமடைந்தோம். உள் மோதல்கள் நமது பலத்தைக் குறைக்கின்றன. சிறிய துரும்புகள் ஒன்றிணைந்து பெரும் பலத்தைக் கொண்டு வருவது போல, நாட்டின் அனைத்து மக்களும் ஒரே கொடியின் கீழ் ஒன்றுபட வேண்டும். நமது நாட்டின் முதல் பலம் நமது ஒற்றுமையில்தான் உள்ளது. அதனால்தான் நாம் அதற்காக கடுமையாக உழைக்கிறோம்.

இன்று, முதல் முறையாக, இலங்கையில் ஒரு அரசாங்கம் வடக்கு மக்களின் கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு கொழும்பில் இயங்கும் அரசின் மீது எப்போதும் சந்தேகங்கள் இருந்தன. இன்று, அந்த சந்தேகம் நீங்கியுள்ளது. இது ஒரு சிறந்த சூழ்நிலை. வடக்கில் இனவாத அரசியல் இயக்கங்களின் இருப்பு நின்றுவிட்டது. பிரதேசம் மற்றும் எல்லைகளால் ஒன்றுபட்டாலும் ஒரு நாடாக ஒன்றுபடாது. அந்த நாடு ஒன்றுபட, அந்த நாட்டு மக்கள் ஒன்றுபட வேண்டும். நமது நாட்டைக் கட்டியெழுப்பும் முக்கிய பணி இதுதான்.

இனவாதத்தை யார் வேண்டுமானாலும் பரப்பலாம். இன்று மிகச் சிறிய குழுவே அதை செய்து கொண்டிருக்கிறது. ஆனால் நம் நாட்டின் உண்மையான பௌத்த மக்கள் அதற்கு பலியாக மாற மாட்டார்கள். வடக்கிலோ அல்லது தெற்கிலோ இனவாதத்துக்கு மீண்டும் இடம் கொடுக்க மாட்டோம். அதனால்தான் நாங்கள் அதற்காக பாடுபடுகின்றோம். அதற்கு சட்டங்கள் போதுமானதாக இல்லாவிட்டால், சட்டங்களை மேலும் வலுப்படுத்துவோம் என்று நான் தெரிவிக்கின்றேன்.

ஊழல் இல்லாத ஆட்சி, ஜனநாயகம் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை பற்றி பேச முடியாத எதிர்க்கட்சியில் உள்ள சிலரின் ஒரே கோசமாக இனவாதம் மாறிவிட்டது. இனவாதத்துக்கு எதிராக நாங்கள் மேற்கொண்டுள்ள செயற்பாடுகள் நமது மகா சங்கத்தினர் மற்றும் மதத் தலைவர்களிடமிருந்து பெரும் ஆதரவைப் பெற்று வருகின்றது. இதுதான் உண்மையான பௌத்த மதம். இரக்கம் மற்றும் கருணைக்கு முன்னுரிமை அளிக்கும் மதம் ஒரு மோதலாக மாறுவதை நாம் அனுமதிக்க முடியாது. எனவே, பௌத்த மதம் மற்றும் அனைத்து மதங்களின் பண்புகள் மற்றும் அடித்தளங்களைக் கொண்ட ஒரு நல்ல சமூகத்தை உருவாக்குவதற்காக நாங்கள் போராடுகின்றோம்." – என்றார்.

வண. கல்லேல்லே சுமனசிறி நாயக்க தேரர் தலைமையிலான மகா சங்கத்தினர், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன, மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ்.பி.எஸ். அபயகோன், நாடாளுமன்ற உறுப்பினர் தனுர திஸாநாயக்க உள்ளிட்ட கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், கண்டி மாவட்ட செயலாளர் இந்திக உடவத்த, பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகள் மற்றும் பிரதேசத்தைச் சேர்ந்த ஏராளமான மக்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.












### லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கு:

# கோட்டாபய சாட்சிக் கூண்டில் ஏறாமைக்குக் காரணம் என்ன?

## யாழ்ப்பாணத்தில் நேற்று போராட்டம்

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் தொடர்பான விவரங்களை வெளிப்படுத்தக் கோரி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கு விசாரணைக்கு அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ நீதிமன்றத்தில் முன்னிலையாவதைத் தவிர்த்து வருகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் தொடர்பான விவரங்களை வெளிப்படுத்தக் கோரி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வழக்கு விசாரணைக்காக யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை முன்னிலையாகி சாட்சியமளிக்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்காக யாழ்ப்பாணம் வருகை தருகின்றமைக்குத்தனக்குப்பாதுகாப்புஅச்சுறுத்தல்இருப்பதாகத் தெரிவித்து, இணைய வழியில் சாட்சியம் அளிக்கத் தயார் என மன்றுக்குக் கோட்டாபய ராஜபக்ஷ சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

கோட்டாபய ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டு ஜனாதிபதி தேர்தல் காலங்களிலும், அதன் பின்னர் ஜனாதிபதியான பின்னரும் யாழ்ப்பாணம் வந்து சென்ற நிலையில் வழக்கு விசாரணைக்காக வருகின்றமையைத் தவிர்க்கின்றார் என்று வழக்குத் தொடுநர் தரப்பு சட்டத்தரணிகள் மன்றில் சுட்டிக்காட்டி இருந்தனர்.

அதனால், மன்று கோட்டாபய ராஜபக்ஷவுக்கு உள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பில் சத்தியக் கடதாசி ஊடாக மன்றுக்குத் தெரிவிக்குமாறு கட்டளையிட்டிருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதிலும் கோட்டபாய ராஜபக்ஷ மன்றில் முன்னிலையாகவில்லை.

அதனையடுத்து இரு தரப்பு சட்டத்தரணிகளும் எழுத்து மூல சமர்ப்பணங்களைச் செய்யுமாறு மன்று கட்டளையிட்டு, வழக்கு விசாரணையை மார்ச் மாதம் 6ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

இந்நிலையில், கோட்டாபய ராஜபக்ஷ நீதிமன்றத்தைத் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கின்றமைக்கு எதிராகவும், அனைத்துக் காணாமல் ஆக்கப்படல்களுக்கும் நீதியை நிலைநாட்டுமாறு கோரியும் நேற்று யாழ். நகரில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில், செம்மணியை மீண்டும் புதைக்க இடமளியோம், அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய், மேலதிக அடக்குமுறைச் சட்டங்கள் வேண்டாம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கு, அனைத்து இன மக்களுக்கும் சமவுரிமையை உறுதிசெய்யும் புதிய அரசமைப்பை வென்றெடுப்போம் எனக் கோஷங்கள் எழுப்பப்பட்டன. **(வழக்கு பற்றிய மேலதீக விவரம் அடுத்த பக்கத்தில்...)**










# பாதுகாப்புக் காரணங்களுக்காக கோட்டாவினால் நேரடியாக யாழ் வந்து சாட்சியமளிக்க முடியாதாம்

## நேற்று நீதிமன்றில் அவர் சார்பில் சத்தியக்கடதாசி சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணத்தில் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் காணாமலாக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பியின்) முழுநேர அரசியல் செயற்பாட்டாளர்களான லலித் மற்றும் குகன் ஆகிய இருவர் தொடர்பிலும் சாட்சியம் அளிப்பதற்காக யாழ்ப்பாணம் வருகைதர தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் இணைய வழியில் சாட்சியம் வழங்க அனுமதிக்கக் கோரியும் அப்போதைய பாதுகாப்புச் செயலாளரும் முன்னாள் ஜனாதிபதியுமான கோட்டபாய ராஜபக்ஷ தனது சட்டத்தரணி ஊடாக சத்திய கடதாசியை சமர்ப்பித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருவதற்கு என்ன அச்சுறுத்தல் இருக்கிறது என்பதை நியாமான காரணங்களுடன் சத்திய கடதாசி மூலம் மன்றில் தெரிவுக்குமாறு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம் இந்த வழக்கின் கடந்த வழக்கு தவணையின் போது உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் லெனின்குமார் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, கோட்டாபய ராஜபக்ஷ தரப்பு அச்சுறுத்தல் என சத்தியக் கடதாசியைச் சமர்ப்பித்தபோதும் என்ன காரணத்திற்காக அச்சுறுத்தல் என்பதை தெளிவாக வெளிப்படுத்தவில்லை எனத் தெரிவித்து அது குறித்து பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கேள்வி எழுப்பினார்.

இந்நிலையில் இது தொடர்பிலான விடயங்களின் எழுத்து மூலமான சமர்ப்பணங்களை இரு தரப்பினரும் எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதி அடுத்த தவணைக்கு வழக்கு அழைக்கப்படும்போது சமர்பிக்க வேண்டும் என நீதிவான் உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சட்டத்தரணி றிவிகார பின்னதுவவுடன் சட்டத்தரணி புரந்தரனும், கோட்டபாய ராஜபக்ஷ சார்பில் சட்டத்தரணி சுரங்க பெரேராவும் நீதிமன்றத்தில் ஆஜராகினர்.

கடந்த 2011ஆம் ஆண்டு மனித உரிமைகள் தினமான டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாண நகரில் நடத்த திட்டமிடப்பட்ட காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்கால் பகுதியில் வைத்து முதல் நாள் கடத்தப்பட்டனர்.

அதனை அடுத்து லலித் மற்றும் குகன் ஆகியயோரின் உறவினர்களால் ஆள்கொணர்வு மனு கடந்த 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாணையின்போது, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின.

அந்நிலையில் இந்த வழக்கு விசாரணைகளின் போது கடந்த 2017ஆம் ஆண்டு மனுவின் சாட்சியாளர்கள் பட்டியலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர்கள் கோட்டபாய ராஜபக்ஷவின் பெயர் இணைக்கப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் போது கோட்டபாய ராஜபக்ஷவை நீதிமன்றில் முன்னிலையாகி சாட்சியமளிக்குமாறு மன்று உத்தரவிட்டது.

பாதுகாப்பு காரணங்களால் தன்னால் யாழ்ப்பாணம் வர முடியாது எனத் தொடர்ச்சியாக கோட்டபாய ராஜபக்ஷ தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# மாகாணசபைத் தேர்தலை அரசு திட்டமிட்டுத் தாமதப்படுத்துகிறது

## சாணக்கியன் நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டு



மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் திட்டமிட்டு தாமதப்படுத்தி வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் குற்றம்சாட்டியுள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் ஒரு தீர்வைக் காண்பதற்காக, நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றைத் நியமிப்பதற்கான பிரேரணை கடந்த 2026 ஜனவரி 6ஆம் திகதி இந்த நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

ஜனவரி 6ஆம் திகதி முதல் எதிர்க் கட்சியானது இந்தத் தெரிவுக்குழுவுக்குத் தனது பிரதிநிதிகளாக ரஞ்சித் மத்தும பண்டார, நான் (சாணக்கியன்), நிசாம் காரியப்பர் மற்றும் மனோ கணேசன் ஆகிய நான்கு பெயர்களையும் அனுப்பி வைத்துள்ளது. ஆனால், தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒரு மாதம் கடந்தும் அரசாங்கம் இதுவரை தெரிவுக் குழுவுக்குத் தனது பெயர்களை அனுப்பவில்லை.

இது மாகாண சபைத் தேர்தல்களைத் தாமதப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் தெளிவான நகர்வாகும். வெளிவிவகார அமைச்சர் இன்று காலை உள்நாட்டு பொறிமுறைகள் பற்றிப் பேசினார்.

வன்முறைகள் மீண்டும் ஏற்படாது என்பதை உறுதிப்படுத்த வேண்டுமாயின், குறைந்தபட்சம் ஏதாவதொரு அதிகாரப் பகிர்வு மாதிரியாவது இருக்க வேண்டும். ஆனால் அறிவிப்பு வெளியாகி ஒரு மாதமாகியும் அரசாங்கம் சார்பில் நீங்கள் இன்னும் பெயர்களை வழங்கவில்லை.

இது மாகாண சபைத் தேர்தல்களைத் தள்ளிப்போடும் ஒரு திட்டமிட்ட செயலாகும். பிரதமரும் இந்தச் சபையில் இருக்கிறார். பிரதமர் அவர்களே, தயவுசெய்து இதில் தலையிட்டு நடவடிக்கை எடுங்கள். எதிர்க்கட்சி தனது பெயர்களை ஏற்கனவே அனுப்பிவிட்டது. – என சாணக்கியன் குறிப்பிட்டுள்ளார்.

---

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரியுமா?" – என்று கேட்டார் அவர். தானே பதிலையும் உடனே அவர் கூறினார்.

"டொனால்ட் ட்ரம்பினால்தான் இந்த நிலைமை. ஒப்புக்கொள்கின்றீர்களா?" – என்றார் அவர்.

நான் "ஆம்...ஆம்" என்றேன்.

"ட்ரம்பைத் தெரிவு செய்தால் இவ்வளவும் நடக்கும், தன் நீண்ட கால சர்வதேச பங்காளர்களான நேட்டோ நாடுகளையே அமெரிக்கா பகைத்துக் கொள்ள நேரிடும். உலக வர்த்தகம் குழம்பும். மீண்டும் உலக யுத்தம் ஒன்று வெடிக்கும் ஆபத்து நேரும் என்பவையெல்லாம் படித்தவர்களான அமெரிக்கர்களுக்கு ட்ரம்புக்கு வாக்களிக்க முன்னர் நன்கு தெரியும். தெரிந்திருந்தும் நாட்டையும் சர்வதேசங்களையும் – முழு உலகையும் – நெருக்கடியில் மாட்டும் விதத்தில் ட்ரம்பைத் தெரிவு செய்தார்கள் அமெரிக்கர்கள். அவர்கள் தெரிந்து கொண்டு செய்த குசும்பு அது என்று ஒப்புக் கொள்கிறீர்களா ஐஸே...?" – என்று கேட்டார் அவர்.

நான் அதற்கும் ஆமாம் என்று விழுந்தடித்துப் பதில் கூறினேன்.

"அமெரிக்கர்கள் செய்த அதே வேலையைத்தான்–குசும்பைத்தான்–யாழ்ப்பாணிகளும் இப்போது செய்திருக்கிறார்கள். வடக்கு – கிழக்கை நீதிமன்றம் சென்று பிரித்து, தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகப் படையினரை சேர்த்து கொடுத்து, அச்சமயத்தில் பௌத்த – சிங்களப் பேரினவாதத்தை பெருமெடுப்பில் கிளறியது இந்த ஜே.வி.பிதான். அது அதிகாரத்துக்கு வந்தால் என்ன நடக்கும் என்பது படித்த முட்டாள்களான யாழ்ப்பாணிகளுக்கு நன்கு தெரியும். அப்படி இருந்தும் விடுதலைப் போர் முகிழ்ந்த யாழ்ப்பாணத்திலிருந்து நமது யாழ்பாணிகள் ஜே.வி.பியினரையும், வைத்தியர் அர்ஜுனா போன்றவர்களையும் தெரிவு செய்து இருக்கிறார்கள். அமெரிக்கர்கள் ஒன்று சேர்ந்து ட்ரம்பை ஜனாதிபதியாக்கிய வேலையைத்தான் இப்போது யாழ்ப்பாணிகள் தங்கள் வாக்குகள் மூலம் யாழ்ப்பாணத்தில் செய்திருக்கிறார்கள்" என்று கூறிய அவர், அதற்கு மேலும் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினார்.

1972 இலும், 78 இலும் கொண்டுவரப்பட்ட அரசமைப்புக்கள் தமிழர்களின் பங்களிப்பின்றியே வந்தன. அந்த அரசமைப்புக்களின் தயாரிப்புகளில் தமிழ் மக்கள் சம்பந்தப்படவில்லை. அவர்களின் இணக்கம் இன்றி அந்த யாப்புக்கள் அவர்கள் மீது வல்வந்தமாகத் திணிக்கப்பட்டமையினால், அதற்கு எதிராக ஆயுதம் தாங்கியும் போராடும் உரித்து தமிழ் மக்களுக்கு உள்ளது என்ற கோட்பாட்டின் அடிப்படையில்தான் உலகம் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை முன்னர் ஓரளவுக்கேனும் அனுசரித்துப் பார்த்தது. இப்போது நாம் தாராளமான தமிழ் பிரதிநிதித்துவத்துடன் ஜே.வி.பியை அதிகாரத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான சகல வலிமையும் அக்கட்சியிடம் இப்போது உள்ளது. அவர்கள் இனி எந்த அரசமைப்பைத் தந்தாலும் அது தமிழர்களின் பங்களிப்போடுதான் உருவானது என்ற அங்கீகாரத்தைப் பெறும். அத்தகைய அங்கீகாரம் உடைய அரசமைப்பு நடைமுறைக்கு வருமானால் அதன் பின்னர் தமிழரின் உரிமைப் போராட்டம் மேலும் பின்னடைவு காணும். இத்தகைய பின்னடைவு நிலையை உருவாக்கக்கூடிய சூழ் நிலையை ட்ரம்புக்கு வாக்களித்த அமெரிக்கர்கள் போல தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த யாழ்ப்பாணிகள் உருவாக்கியுள்ளனர் என்றார் அவர்.

எனக்கு என்னவோ அவர் 'உங்கள் யாழ்ப்பாணிகள்' என்று யாழ்ப்பாணத்தவர்களை அமெரிக்க மக்களோடு ஒப்பிட்டு பேசியமை, உயர்வு நவிழ்ச்சி அணியை நினைவூட்டியது. பாராட்டுவது போலப் பாராட்டி, தலையில் நசுக்கிடாமல் ஒரு குட்டு வைத்தமை போன்ற கருத்தைத் தந்தது. உங்களுக்கு அத்தகைய கருத்தை அவரின் தொலைபேசி நிலைப்பாடு தரவில்லையா வாசகர்களே....?

---

## இலங்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

டித்வா புயலின்போது இலங்கைக்கு இந்தியா வழங்கிய ஒத்துழைப்புகளுக்கு றில்வின் சில்வா நன்றி தெரிவித்தார்.

இலங்கைக்கான தமது நாட்டு ஆதரவை இந்திய வெளிவிவகார அமைச்சர் உறுதிப்படுத்தினார்.

இலங்கை மீண்டெழுவதற்கு இந்தியாவின் உதவிகள் தொடரும் என்றும் அவர் உறுதியளித்தார்.

---

## கெஹலியவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு பிரதம நீதிவானின் உத்தியோகபூர்வ அறையில் அவர் நேற்று பிற்பகல் ஆஜர்படுத்தப்பட்ட பின்னரே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிவான், சந்தேக நபரை தலா 5 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு உத்தரவிட்டார்.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவால் முறையற்ற வகையில் ஈட்டப்பட்ட பணத்தை முறையற்ற வழிகளில் கையாள்வதற்கு உதவியமை மற்றும் அதற்கு உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் சமித்திரி ரம்புக்வெல இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவால் நேற்று முற்பகல் கைது செய்யப்பட்டிருந்தார்.

---

## மேலும் நீடிக்கப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழங்கியுள்ளது.

இந்தத் தீர்மானம் சபையில் நேற்று மாலை 104 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்கு ஆதரவாக 106 வாக்குகளும், எதிராக 2 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிப்பதுதொடர்பில்தமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வாக்கெடுப்பைக் கோரினார்.

அதன்படி, சபையில் நேற்று மாலை ஆளும் தரப்பு வரிசையில் அமர்ந்திருந்த 106 உறுப்பினர்களும் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

எதிரணி வரிசையில் அமர்ந்திருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகிய இருவர் மாத்திரம் அதற்கு எதிராக வாக்களித்தனர்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட ஏனைய எதிர்க்கட்சிகள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

---

## போராட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2025, 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளில் அரச ஊழியர்களின் சம்பள உயர்வுக்காக 33 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்படுகின்றது.

அதற்கமைய, 2027 ஆம் ஆண்டில் மூன்றாவது சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டபின்னர், வரவு–செலவுத்திட்டத்தில்ஏற்படும் தாக்கத்தைக் கருத்திள்கொண்டே ஏனைய கொடுப்பனவுகள் குறித்துப் பரிசீலிக்கப்படும். அதுவரை யார் எத்தகைய போராட்டங்களை முன்னெடுத்தாலும் கொடுப்பனவுகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது." – என்றார்.

# புங்குடுதீவில் கூரிய ஆயுதங்களுடன் இரண்டு இளைஞர்கள் சிக்கினார்கள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். புங்குடுதீவில் கூரிய ஆயுதங்களுடன் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புங்குடுதீவில் வன்முறைக் கும்பல்களின் அட்டகாசம் அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்படுகின்றது என்று அப்பகுதி மக்களால் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தொடர்ந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்நிலையில் பொலிஸார், புங்குடுதீவு பகுதியில் முன்னெடுத்த விசேட நடவடிக்கையின் போது, கூரிய ஆயுதங்களை உடைமையில் வைத்திருந்த இரண்டு இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவருடன் அவர்களின் உடைமையில் இருந்து மீட்கப்பட்ட இரண்டு வாள்கள் மற்றும் கஜேந்திரா கோடரி என்பவற்றைப் பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்று மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, கைது செய்யப்பட்ட இருவருடனும் சேர்ந்து இயங்கிய சிலரை அடையாளம் கண்டுகொண்டுள்ளதாகவும், அவர்களையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொய் முகம் அம்பலம்

தாங்கள் ஆட்சி அதிகாரத்துக்கு வந்தால் அடுத்த ஒரு வருட காலத்துக்குள் உள்ளூராட்சி தேர்தலையும் மாகாண சபை தேர்தல்களையும் நடத்தி முடிப்போம் என்று சூளுரைத்து, வாக்குறுதி கொடுத்து அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி தரப்பு இப்போது தேர்தலைக் கண்டு அஞ்சுகிறது.

ஆரம்பத்தில் ஜனாதிபதித் தேர்தலிலும் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலிலும் கிடைத்த பெரும் வெற்றி உள்ளூராட்சி தேர்தலில் அடிபட்டு போனதும் இப்போது மெல்ல தேர்தல் களத்தில் இருந்து ஜாகா வாங்குகிறது ஆளும்தரப்பு.

மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் தன்னுடைய அரசின் பின்னடைவு நிலை பகிரங்கமாகி அம்பலமாகிவிடும் என்று கருதித் தடுமாறும் அரசு, அதன் காரணமாக அந்தத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கச் சாக்குப் போக்கு சொல்கிறது. அதற்காகவே மாகாண சபை தேர்தல் முறைமை பற்றித்தீர்மானிக்க நாடாளுமன்றத் தெரிவுக் குழு என்று கதை விட்டது. தெரிவுக் குழு என்ற பெயரில் காலத்தை இழுத்தடித்து, அந்த தேர்தலை நடத்தாமல் தள்ளி போடுவதுதான் ஆளும்தரப்பின் திட்டம். அதை நேற்று நாடாளுமன்றத்தில் அப்பட்டமாக அம்பலப்படுத்தி இருக்கிறார் சாணக்கியன் எம்.பி.

மாகாண சபைத் தேர்தல் முறைமையைத் தீர்மானிப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்றது அரசு.

தெரிவுக் குழு பற்றிய அறிவிப்பு வெளியாகி ஒரு மாதம் முடிந்து விட்டது. தெரிவுக்குழுக்குத் தமது பக்க உறுப்பினர்களை எதிர்க் கட்சிகள் சமர்ப்பித்து விட்டன. எனினும் ஒரு மாதம் கடந்தும் தமது பிரதிநிதியை தெரிவுக் குழுவுக்கு நியமிக்காமல் இழுத்தடிக்கின்றது அரசு.

இதனால் தெரிவுக் குழு அமைக்கப்படுவதோ அதன் நடவடிக்கைகள் ஆரம்பமாவதோ சாத்தியமின்றி இழுபடுகின்றது.

தெரிவுக் குழு அமைப்பதிலேயே இத்தகைய இழுத்தடிப்பும் கால தாமதமும் என்றால், அந்தத் தெரிவுக் குழு தனது அமர்வுகளை நடத்தி, தேர்தலை நடத்துவதற்கான முடிவை எட்டுவதற்கு எவ்வளவு காலம் செல்லும் என்று சொல்லத் தேவையில்லை.

மாகாண சபை தேர்தல் முறை வேண்டாம் என்று கருதும் தேசிய மக்கள் சக்தி, அதனை வெளிப்படையாகக்கூறாமல் தன்னுடைய ஆட்சிக் காலம் முழுவதுமே மாகாண சபை தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கத் திட்டமிடுகின்றது.

அரசின் அந்தப் பொய் முகத்தை - வேஷத்தை - சாணக்கியன் நேற்று நாடாளுமன்ற அம்பலப்படுத்தி இருக்கின்றார்.

இது, மாகாண சபைத் தேர்தல்களைத் தள்ளிப்போடும் ஒரு திட்டமிட்ட செயலாகும் என்று நாடாளுமன்றத்தில் அவர் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு முற்றிலும் உண்மை.







# திருடர்களின் வளையம் உடையும் ஆண்டே இது!

## பதவி எதுவாக இருந்தாலும் சட்டம் அமுல் என்று கண்டியில் ஜனாதிபதி தெரிவிப்பு

நாட்டின் பொருளாதார நன்மைகள் ஒரு சில குடும்பங்களைச் சுற்றியும், அந்தக் குடும்பங்களைச் சுற்றியுள்ள திருடர்களின் வளையத்தைச் சுற்றியும் குவிந்திருந்த சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, அனைத்து பொருளாதார நன்மைகளின் பலன்களும் நாட்டின் பொருளாதார நிலையில் கீழ் மட்டத்திலுள்ள மக்களுக்குச் செல்வதை உறுதி செய்வதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கம் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மேலும், எவர், எப்போது, எவ்வாறான பதவியில், இருந்தாலும் அனைவருக்கும் சட்டம் அமுல்படுத்தப்படும் என்றும் வலியுறுத்திய ஜனாதிபதி, அதன்படி, இந்த நாட்டில் நீதி மற்றும் நியாயம் தொடர்பாக நாட்டு மக்களின் அதிக கவனத்தையும் நம்பிக்கையையும் பெறும் வருடமாக இந்த வருடம் இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற டித்வா சூறாவளியால் முழுமையாகவும் பகுதியளவிலும் வீடுகள் சேதமடைந்த தனிநபர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களுக்கு இழப்பீடு வழங்கும் நிகழ்வின் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

குண்டசாலை, மெததும்பர, பாததும்பர மற்றும் பன்வில பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 150 பயனாளிகளுக்கு இந்த இழப்பீடு வழங்கப்பட்டதுடன், அடையாள ரீதியாக ஜனாதிபதி இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

வரவு – செலவுத் திட்ட சுற்றறிக்கை 08/2025 இன் தொடர் இலக்கம் 12 இன் படி வீடுகள் முழுமையாக சேதமடைந்தவர்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்காக வழங்கப்படும் 50 இலட்சம் ரூபாவில் முதல் தவணையாக தலா 20 இலட்சம் ரூபாவுக்கான காசோலைகள் இங்கு வழங்கப்பட்டன. தமது சொந்தமான காணியில் அல்லது முன்னர் வசித்த இடத்தில் வீடுகளை நிர்மாணிப்பவர்கள் அல்லது அரசாங்கத்தால் வழங்கப்பட்ட காணியில் வீடுகளை நிர்மாணிப்பவர்கள் இதில் உள்ளடங்குவர்.

மேலும், வரவு – செலவுத் திட்ட சுற்றறிக்கை 08/2025 இன் தொடர் இலக்கம் 14 இன் படி, வீடுகள் பகுதியளவு சேதமடைந்தவர்களுக்கு மதிப்பீட்டின்படி வீடுகளை புனரமைக்க இழப்பீடு வழங்கப்பட்டது. மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டை குறித்த சுற்றறிக்கையின்படி அதிகபட்சமாக 25 இலட்சம் ரூபா வரை வழங்க முடியும் என்றாலும், உடனடி நிவாரணம் வழங்கும் நோக்கத்தில், பயனாளிகளின் விருப்பப்படி, மதிப்பீடு மேற்கொள்ளாமல் 05 இலட்சம் ரூபா கொடுப்பனவுகளைப் பெற விரும்பும் பயனாளிகளுக்கு 5 இலட்சம் ரூபா பகுதியளவு சேத இழப்பீட்டுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக தமது வர்த்தக நிலையங்கள் அல்லது இயந்திரங்கள் சேதமடைந்தவர்களுக்கு தமது வர்த்தகங்களை மீண்டும் தொடங்க தலா 2 இலட்சம் ரூபா இழப்பீடும் இதன்போது வழங்கப்பட்டன. சிறிய, நடுத்தர அல்லது பாரிய அளவு என்ற எந்தவொரு வேறுபாடும் இன்றி, பதிவுசெய்யப்பட்ட அனைத்து வர்த்தகங்களுக்கும் அவர்களின் வர்த்தக நடவடிக்கைகளை மீண்டும் தொடங்க, ஜனாதிபதியின் அறிவுறுத்தலின்படி, இந்த நிதி உதவி வழங்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க,

“நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவது எந்தவொரு அரசாங்கத்தினதும் அடிப்படைப் பொறுப்பாகும். இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு பொருளாதாரம் வீழ்ச்சியடையும் போது எதிர்கொள்ளும் அழிவுகளையும் பிரச்சினைகளையும் நேரடியாக நாம் அனுபவித்தோம்.

இந்நாட்டு மக்கள் மருத்துவமனைகளில் மருந்து பற்றாக்குறையாலும், எரிபொருளுக்காகவும், பால் மாவுக்காகவும் வரிசைகளில் நின்று துன்பப்பட்டனர். நமது நாடு நீண்ட காலமாகப் பின்பற்றி வந்த பொருளாதாரக் கொள்கைகளாலும், அந்தக் கொள்கைகளுடன் தொடர்புடைய இலஞ்சம், மோசடி மற்றும் ஊழல்களாலும் நமது நாடு பெரும் பொருளாதார சரிவைச் சந்தித்தது. அன்று, இந்நாட்டில் பல அபிவிருத்தித் திட்டங்கள் பொருளாதாரத் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை.

அரசியல் நலன்களுக்காகவும் சட்ட விரோத பணப் பரிமாற்றங்களுக்காகவும் கட்டுமானம் தொடங்கப்பட்டு பாதியிலேயே நிறுத்தப்பட்ட, கட்டுமானம் முடிக்கப்பட்டு கைவிடப்பட்ட சுமார் 1800 அரச கட்டடங்கள் இருப்பதாக அண்மைய அறிக்கை கூறுகின்றது. அந்தக் கட்டுமானங்கள் நாட்டின் தேவைகளின் அடிப்படையில் தொடங்கப்படவில்லை. பிரதேச அமைச்சரின் தேவைகளுக்காக அல்லது நண்பர்களுக்கு ஒப்பந்தங்களை வழங்குவதற்காக அவை ஆரம்பிக்கப்பட்டன. நிர்மாணிக்கப்பட்ட பிறகு பராமரிக்கப்படாத சில கட்டிடங்களும் உள்ளன.

சரியான பொருளாதார திட்டமிடல் இல்லாமை, அந்தந்த சமயங்களில் அரசியல்வாதிகளின் தேவைகள், இலஞ்சம் மற்றும் ஊழல் ஆகியவை இந்த வீழ்ச்சிக்கு வழிவகுத்தன. இந்த வீழ்ச்சி இன்னும் முடிவடையவில்லை. பொருளாதார வீழ்ச்சி காரணமாக நிறுத்தப்பட்ட திட்டங்களை மீண்டும் தொடங்க எவ்வளவு செலவாகும் என்பதைக் கண்டறிய அண்மையில் நான் ஒரு அறிக்கையை கோரினேன். 43 பாரிய திட்டங்களில், 20 திட்டங்கள் குறித்து கண்டறியப்பட்டன. அந்த 20 திட்டங்களும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்தால், அவற்றுக்கு 30,000 கோடி ரூபா செலவாகியிருக்கும். ஆனால் இப்போது 61 ஆயிரம் கோடி ரூபா செலவிட வேண்டியுள்ளது. எனவே புதிய மதிப்பீடு இரட்டிப்பாகியுள்ளது. பொருளாதார வீழ்ச்சியின் விளைவுகளை நாம் இன்னும் அனுபவித்து வருகின்றோம்.

நாம் அரசாங்கத்தை பொறுப்பேற்ற பிறகு, நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை நிலைநாட்டுவதே எமது முதன்மையான பணியாக மாறியது. அது இல்லாமல், சட்டத்தின் ஆட்சி, சமூக நீதி, கல்வி, சுகாதாரம் மற்றும் வீதிக்கட்ட

தொடர்ச்சி▼





# திருடர்களின் வளையம் உடையும் ஆண்டே இது!

## பதவி எதுவாக இருந்தாலும் சட்டம் அமுல் என்று கண்டியில் ஜனாதிபதி தெரிவிப்பு

தொடர்ச்சி▲

மைப்பு பற்றி சிந்திக்கவே முடியாமல் போனது. நாங்கள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து, இந்த நாட்டின் பொருளாதாரம் பல முக்கிய காரணிகளால் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. ஒரு நாடாக நாம் அடையும் இந்த பொருளாதார வெற்றிகள் அனைத்தும் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்வதே எங்கள் நோக்கம். ஆனால் வரலாற்றில் நடந்திருப்பது என்னவென்றால், பொருளாதார நன்மைகள் ஒரு சில குடும்பங்களைச் சுற்றி குவிந்துள்ளன, மேலும் அந்தக் குடும்பங்களைச் சுற்றி திருடர்கள் கூட்டம் உள்ளது.

மக்களின் பணத்தில் ஒரு சதத்தையேனும் பெற்றுக் கொள்ளும் எண்ணம் எமக்குக் கிடையாது. நாட்டின் பொருளாதார வெற்றிகளை சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கும் பகிர்ந்தளிப்பதே எமது நோக்கமாகும். எனவே, இந்த "டித்வா" அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நிவாரணம் வழங்குவதே எமது இலக்காகும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான வீடுகளை நிர்மாணிக்கவும், வீதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதற்காக இந்தியா, சீனாஉள்ளிட்ட நட்புநாடுகளின் ஆதரவு எமக்குக் கிடைக்கிறது. அதேபோல், பல தனியார் தொழில்முனைவோரும் எமக்கு உதவி வருகின்றனர். அனைவரது ஒத்துழைப்புடன் இந்த மக்களுக்கு ஒரு சிறந்த வாழ்க்கைத்தரத்தை உருவாக்கிக் கொடுப்பதே எமது நோக்கமாகும்.

ஆட்சியாளர்கள் என்ற வகையிலும் அரச ஊழியர்கள் என்ற வகையிலும் நம் அனைவரினதும் பொறுப்பு இதுவேயாகும். நாம் பொதுமக்களின் பணத்தில்தான் கல்வி கற்றோம். எனவே, நாம் அவர்களுக்குத் திரும்பப் பணியாற்ற வேண்டும். இந்த "டித்வா" சூறாவளி அனர்த்தத்தின் மத்தியிலும் ஒரு நாடாக விரைவாக எழுச்சிபெற எம்மால் முடிந்துள்ளது. இதற்காக அரச அதிகாரிகள் பெரும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். அவர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொருளாதார அபிவிருத்தியே எமக்கு மிக முக்கியமானது . அதேபோல், சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்த வேண்டும். அதனை நாம் நிச்சயமாகச் செய்வோம். இதில் எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. நீதித்துறைக் கட்டமைப்பு, சட்ட விசாரணை நிறுவனங்கள், சட்டமாஅதிபர்திணைக்களம்போன்ற நிறுவனங்களில் பாரிய வீழ்ச்சிகள் காணப்பட்டன. அந்த நிலையை மாற்றி அந்த நிறுவனக் கட்டமைப்பை வலுப்படுத்த நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு உயர் சம்பளத் தளத்தை அமைத்துக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளோம். மேலும், அந்த ஆணைக்குழுவிற்கு நேரடியாக அதிகாரிகளை இணைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்கான பொறிமுறையும் தயார் செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்றே சட்டத்தை அமுல்படுத்துவதற்கான நிறுவனக் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. முறையற்ற வகையில் ஈட்டப்பட்ட சொத்துக்களை மீண்டும் அரசுடமையாக்குவதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மிக விரைவில் திருத்தப்பட்டு, தேவையான சட்டங்கள் கொண்டுவரப்படும். அத்துடன், திட்டமிடப்பட்ட அடிப்படையிலான குற்றங்களைக் கட்டுப்படுத்தத் தேவையான சட்டங்களை உருவாக்கி வருகின்றோம். பணமோசடியைத் தடுப்பதற்கான சர்வதேச தரத்திலான சட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. நாட்டை ஒரு நாகரிகமான நிலைக்குக் கொண்டுவரத் தேவையான சட்டத் திருத்தங்கள் மற்றும் நிறுவன வலுவூட்டல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சட்டத்தின் கோட்டுக்குக் கீழே இந்த நாட்டின் அனைவரும் இருக்கின்றார்கள் என்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும். எவரும் சட்டத்துக்கு மேலானவர்கள் அல்லர். அத்தகைய ஒரு நாடுதான் எமக்கு அவசியம். அந்த மாற்றத்தை நாம் தற்போது செய்து வருகின்றோம். இந்த மாற்றத்தினால் நியாமானவர்களுக்கு எவ்வித வலியும் ஏற்படாது, ஆனால் தவறு செய்பவர்களுக்கு வலிக்கும். அனைவருக்கும் நாட்டைப் பற்றி நல்லெண்ணங்கள் உள்ளன. நல்லெண்ணம் இருந்தாலும் செயற்பாட்டில் இறங்கும்போதுஅந்தநல்லெண்ணங்கள்இயல்பாக வெளிப்படாது. அந்த நல்லெண்ணங்களை மட்டும் பெற்றுக்கொள்ளவே நாம் அனைவரும் பாடுபடுகிறோம்.

யார், எப்பொழுது, எந்தப் பதவியில் எவ்வளவு உயரத்தில் இருந்தாலும், அவர்கள் அனைவரையும் நாம் சட்டத்தின் முன் நிறுத்துவோம். அந்த வகையில், இலங்கையில் நீதியும் நியாயமும் நிலைநாட்டப்படுவதில் மக்கள் அதிக நம்பிக்கைகொள்ளும் ஆண்டாக இந்த ஆண்டு அமையும் என நான் கருதுகிறேன். அதற்காக எதற்கும் முகம் கொடுக்க நாம் தயாராக இருக்கிறோம்.

சட்டம் தங்கள் மீது கை வைக்காது எனச் சிலர் நினைத்தார்கள். தங்களைச் சுற்றியுள்ள பாதுகாப்பு கதிர்கள் சட்டத்தை சுட்டெரிக்கும் என்று கருதினார்கள். அவர்கள் எவ்வளவு "பெரிய மனிதர்களாக" இருந்தாலும், அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவோம். சட்டம் என்பது "பெரிய மனிதர்களுக்கு முன்பாக சிலந்தி வலை" போன்றது என்று கூறப்பட்டதுண்டு. அந்த சிலந்தி வலையில் இனி பெரியவர்களும் சிக்கிக்கொள்வார்கள். சட்டம் தங்களை நெருங்கும் போது தற்போது அவர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

ஆனால் பெரியவர், சிறியவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதமின்றி சட்டம் அனைவரையும் சென்றடையும் . எனவே, குற்றவாளிகள் மட்டுமே அச்சப்பட வேண்டும், நல்ல மனிதர்கள் அல்ல. தவறு செய்தால் அது காலப்போக்கில் மறைந்துவிடாது. எப்போதாவது ஒரு முறை அதற்கான தண்டனை கிடைக்கும் என்பதை ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் புரிய வைக்க வேண்டும். அப்படிச் செய்தால் மட்டுமே எதிர்காலச் சந்ததியினர் ஒரு நாகரிகமான நாடு குறித்து நம்பிக்கைகொள்வார்கள். அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றுவோம்." – என்றார்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன, மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ்.பி.எஸ். அபயகோன், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தனுர திசாநாயக்க உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள், கண்டி மாவட்ட செயலாளர் இந்திக உடவத்த, பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# உலகக் கிண்ண தொடருக்கான இலங்கை அணியில் மாற்றம்

எதிர்வரும் இருபதுக்கு 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்காக அறிவிக்கப்பட்டிருந்த இலங்கை அணியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் தெரிவுக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, இலங்கை அணியில் இடம்பெற்றிருந்த வேகப்பந்து வீச்சாளர் எஷான் மாலிங்கவுக்கு ஏற்பட்டுள்ள உபாதை காரணமாக, அவர் தொடரிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக மற்றுமொரு வேகப்பந்து வீச்சாளரான பிரமோத் மதுஷான் அணியில் உள்வாங்கப்பட்டுள்ளார்.

இந்த மாற்றத்திற்காக சர்வதேச கிரிக்கெட் சபையின் தொழில்நுட்பக் குழுவின் அனுமதியும் ஏற்கனவே கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.







# லாஃப்ஸ் எரிவாயு விலை நள்ளிரவு முதல் அதிகரிப்பு




நேற்று நள்ளிரவுடன் அமுலுக்கு வரும் வகையில் லாஃப்ஸ் எரிவாயு விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

லாஃப்ஸ் எரிவாயு நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 12.5 கிலோ கிராம் எடைகொண்ட சமையல் எரிவாயுவின் விலையை 80 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நேற்று நள்ளிரவு முதல் 12.5 கிலோ கிராம் எடைகொண்ட லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை 4,330 ரூபாவாக விற்பனை செய்யப்படும்.

அத்துடன், 5 கிலோ கிராம் எடைக் கொண்ட சமையல் எரிவாயுவின் விலையை 32 ரூபாவினால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 5 கிலோ கிராம் எடைக் கொண்ட சமையல் எரிவாயுவின் விலை 1,742 ரூபாவாக விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கனிம அகழ்வு உரிமங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தம்



புதிய தேசிய கனிமக் கொள்கை முறைப்படி அறிமுகப்படுத்தப்படும் வரை, நாட்டில் கனமான கனிமங்களை அகழ்வதற்கான அனைத்து வகையான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதையும் தற்காலிகமாக நிறுத்திவைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு அமைச்சில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி இதனைத் தெரிவித்தார்.

புதிய தேசிய கனிமக் கொள்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்று, அது நாடாளுமன்றத்தின் ஊடாக நிறைவேற்றப்படும் வரை இந்த இடைநிறுத்தம் அமுலில் இருக்கும்.

குறிப்பாக இல்மனைட், ரூட்டைல், சிர்கான் மற்றும் கார்னட் போன்ற பெறுமதி மிக்க கனமான கனிம வகைகளுக்கே இந்தத் தடை அல்லது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

முறையான கொள்கைத் திட்டம் வகுக்கப்படும் வரை நாட்டின் இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி மேலும் சுட்டிக்காட்டினார்.

# 17 ஆம் திகதி கிடைக்கப்பெறவுள்ள வழக்கு தீர்ப்பு சுதந்திர கட்சியின் எதிர்காலத்தை தீர்மானிக்கும்

## தயாசிறி ஜயசேகர நம்பிக்கை



"ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் மிக முக்கியமான வழக்குத் தீர்ப்பு எதிர்வரும் 17ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. இது கட்சியின் அடுத்தகட்ட நகர்வுகளுக்கு வழிகாட்டும். சுதந்திர கட்சியைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் அதன் தலைமைத்துவத்தில் மாற்றம் அவசியமானது."

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தல் என எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தேர்தல் ஆணைக்குழு கட்சியை ஒரு செயலிழந்த நிலையில் வைத்துள்ளது.

தற்போது கட்சி அலுவலகத்தைக் கைப்பற்றி வைத்துள்ளவர்களுக்கு எந்தவொரு சட்டபூர்வமான அதிகாரமும் இல்லை. அடிமட்டத் தொண்டர்கள் கட்சி மீண்டும் புத்துயிர் பெறுவதற்காகக் காத்திருக்கிறார்கள். சுமார் 30 ஆண்டுகள் நாட்டை ஆட்சி செய்த ஒரு மாபெரும் அரசியல் கட்சியின் தலைவிதியை இந்தத் தீர்ப்பு தீர்மானிக்கும். நீதித்துறை மீது எனக்கு முழுமையான நம்பிக்கை இருக்கிறது." – என்றார்.



# சுற்றாடல் பாதுகாப்பில் தெற்காசியாவில் 2ஆவது இடத்தைப் பிடித்தது இலங்கை

யேல் மற்றும் கொலம்பிய பல்கலைக் கழகங்கள் இணைந்து வெளியிட்டுள்ள 2024 ஆம் ஆண்டிற்கான சர்வதேசச் சுற்றாடல் பாதுகாப்பு சுட்டெண் அறிக்கையில், இலங்கை 180 நாடுகளில் 134 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதில் தேசிய அளவில் எடுக்கப்படும் முயற்சிகளின் அடிப்படையில், 100 க்கு 38.8 புள்ளிகளை இலங்கை பெற்றுள்ளது.

உலகளாவிய ரீதியில் இலங்கை பின்தங்கியிருந்தாலும், தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கை இரண்டாவது சிறந்த இடத்தைப் பிடித்துள்ளது.

பிராந்தியத்தில் பூட்டான் முதலிடத்தில் உள்ளது.

காற்றுத் தரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தில் தெற்காசியாவில் மாலைத்தீவு முன்னிலையில் உள்ளது.

தெற்காசியாவின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் நிலை ஓரளவுக்கு முன்னிலையில் உள்ளது.

இந்தியா 176 ஆவது இடம் (27.6 புள்ளிகள்), பாகிஸ்தான் 179 ஆவது இடம் (25.5 புள்ளிகள்), வியட்நாம் 180 ஆவது இடம் (உலகின் மிகக் குறைந்த புள்ளி – 24.6) பெற்றுள்ளன.

எஸ்டோனியா உலக அளவில் முதலிடத்தைப் (75.7 புள்ளிகள்) பெற்றள்ளது.

இலங்கையின் ஒட்டுமொத்த தரவரிசை குறைவாக இருந்தபோதிலும், ஒரு குறிப்பிட்ட விடயத்தில் இலங்கை உலகளாவிய போக்கிற்கு மாறாகச் சாதனை படைத்துள்ளதாக அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் வாகனங்களின் எண்ணிக்கை 40 சதவீதத்தால் அதிகரித்துள்ள போதிலும், இலங்கையின் வளிமண்டலக் காற்றின் தரம் மோசமடையவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது நாட்டின் சுற்றாடல் முகாமைத்துவத்தில் ஒரு நேர்மறையான அம்சமாகக் கருதப்படுகிறது.

அரசாங்கத்தின் தூய்மையான இலங்கை போன்ற திட்டங்கள் நடைமுறையில் உள்ளபோதிலும், உலகத் தரவரிசையில் முன்னேறுவதற்கு இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, ஒரு நாட்டின் செல்வம் அந்த நாட்டின் சுற்றாடல் ஆரோக்கியத்துடன் நேரடியாகத் தொடர்புடையது என்றும், வளர்ந்த நாடுகள் இதில் அதிக புள்ளிகளைப் பெறுகின்றன என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# டித்வா சூறாவளி பாதிப்பிலும் பொருளாதாரம் ஸ்திரமானது

## மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க உறுதி




டித்வா சூறாவளியின் தாக்கம் நிலவியபோதிலும், இலங்கையின் பொருளாதாரம் சிறந்த நிதி ஒழுக்கத்துடன் பேணப்பட்டு வருவதாக மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் யுகத்தில் பொருளாதார வளர்ச்சி என்ற தலைப்பிலான மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பொருளாதார நெருக்கடிக்கு முன்னர் அரச வங்கிகளில் ஒரு டிரில்லியன் ரூபா பற்றாக்குறை நிலவியது.

ஆனால், கடந்த சில ஆண்டுகளில் கடைப்பிடிக்கப்பட்ட வருவாய் ஈட்டும் முறைகள் மற்றும் நிதி ஒழுக்கம் காரணமாக, தற்போது அரச வங்கிகளில் ஒரு டிரில்லியன் ரூபா மேலதிகப் பணம் காணப்படுகிறது.

இந்த நிதி மேலதிகம் காரணமாக, அனர்த்த நிலைமைகளை எதிர்கொள்ள அரசாங்கம் மீண்டும் கடன் வாங்க வேண்டிய தேவை ஏற்படவில்லை.

இந்த ஆண்டு இறுதிக்குள் 8 பில்லியன் டொலர் பெறுமதியான பாதுகாப்பு அந்நியச் செலாவணி கையிருப்பை கட்டியெழுப்ப எதிர்பார்க்கிறோம்.

தற்போது பணவீக்கம் 2 வீதமாக உள்ளது. இதனை 5 வீத மட்டத்தை விட அதிகரிக்காமல் பேணுவதே இலக்காகும்.

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட சொத்திழப்புகள் குறித்து உலக வங்கி வெளியிட்ட அறிக்கையில் 4.1 பில்லியன் டொலர் சேதம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இருப்பினும், அரசாங்கத்திடம் உள்ள நுணுக்கமான தரவுகளின்படி, மீளக் கட்டியெழுப்புவதற்கான செலவு மதிப்பீடு செய்யப்பட்டதை விடக் குறைவாகவே இருக்கும்.

அடுத்த ஆண்டு முதல் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5 வீத மட்டத்தை எட்டும்.

நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும் அல்லது 2028 இல் மீண்டும் கடன் மறுசீரமைப்புக்குச் செல்ல நேரிடும்.

நாங்கள் 2025ஆம் ஆண்டில் எமது கையிருப்பைப் பயன்படுத்தி 3,934 மில்லியன் டொலர் கடனைச் செலுத்தி முடித்துள்ளோம்.

கையில் பணம் இருக்கும்போது, தாமாகவே முன்வந்து கடனைச் செலுத்தாத ஒரு நாடாக எங்களை அடையாளப்படுத்திக் கொண்டால், எந்த நாடும் மீண்டும் எங்களுக்குக் கடன் வழங்காது.

இத்தகைய அடிப்படை ஆதாரமற்ற கதைகள் முதலீட்டாளர்களிடையே தேவையற்ற சந்தேகத்தை உருவாக்கும்.

பொருளாதாரக் குறிகாட்டிகள் நெருக்கடிக்கு முன்னைய காலத்தை விட தற்போது சிறந்த நிலையில் இருக்கிறது. பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடைவதைப் பார்க்க விரும்புபவர்களே இவ்வாறான கருத்துக்களைப் பரப்புகின்றனர்.” – என்றார்.

# சாதாரண தரப் பரீட்சை 2025: மேலதிக வகுப்புகளுக்கு தடை




கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை (2025) ஆரம்பமாகவுள்ள நிலையில், எதிர்வரும் 11ஆம் திகதி நள்ளிரவு முதல் பரீட்சை நிறைவடையும் வரை மேலதிக வகுப்புகள் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களம் விடுத்துள்ள விசேட அறிக்கையில் இந்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பரீட்சைகள் 2025 மார்ச் 17ஆம் திகதி முதல் மார்ச் 26 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

நாடளாவிய ரீதியில் அமையப்பெற்றுள்ள 3,545 பரீட்சை மத்திய நிலையங்களில் இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது.

பெப்ரவரி 11 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி முதல் முதல் பரீட்சை முடியும் வரை பரீட்சார்த்திகளுக்கான மேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துதல், பாடங்கள் தொடர்பான செயலமர்வுகள் மற்றும் வழிகாட்டல்களை நடத்துதல், பரீட்சை வினாத்தாள்களை ஒத்த மாதிரி வினாத்தாள்களை அச்சிடுதல் மற்றும் விநியோகித்தல், வினாக்கள் முன்கூட்டியே வழங்கப்படும் எனச் சுவரொட்டிகள், பதாகைகள் அல்லது சமூக வலைத்தளங்கள் வாயிலாக விளம்பரப்படுத்துதல் என்பனத் தடைசெய்யப்பட்டுள்ளன.

பரீட்சைத் திணைக்களத்தின் இந்த உத்தரவை மீறிச் செயல்படும் நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு எதிராகப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பரீட்சை ஆணையாளர் நாயகம் எச்சரித்துள்ளார்.

பரீட்சை தொடர்பான முறைகேடுகள் அல்லது விதிகளை மீறுவோர் குறித்து பரீட்சைத் திணைக்கள அவசர இலக்கம்: 1911 மற்றும் காவல்துறை தலைமையகம்: 011 242 1111 என்பவற்றுக்கு அறிவிக்க முடியும்.



# இலங்கை போக்குவரத்து சபையில் முதன்முறையாக பெண் நடத்துனர்கள்

இலங்கை போக்குவரத்து சபையின் வரலாற்றில் முதல் தடவையாக 19 பெண் நடத்துனர்கள் நேற்று நிரந்தர சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

கொழும்பு, மாகும்புர பல்நோக்கு போக்குவரத்து மையத்தில் நேற்று காலை நடைபெற்ற உத்தியோகபூர்வ விழாவின் போது இந்த நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

ஊடகத்துறை பிரதி அமைச்சர் கௌசல்யா ஆரியரத்ன, கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமன்மலி குணசிங்க மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் சஜீவ கனகரத்ன ஆகியோர் முன்னிலையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பிரதி அமைச்சர் கௌசல்யா ஆரியரத்ன, போக்குவரத்துத் துறையில் பாலின சமத்துவத்தை நிலைநாட்டும் நோக்கில் இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நாள் என்று குறிப்பிட்டார்.

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கபதவியேற்றதுமுதல்,போக்குவரத்துத் துறையில் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் துன்புறுத்தல்களைக் குறைக்கவும், பெண்களுக்கான சம வாய்ப்புகளை வழங்கவும் முன்னெடுத்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே இந்த நியமனங்கள் அமைந்துள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வரலாற்று நிகழ்வின் போது, புதிதாக நியமிக்கப்பட்ட பெண் நடத்துனர்களுக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட புதிய சீருடைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

இந்த நியமனங்கள் மூலம், இலங்கையின் பொதுப் போக்குவரத்துத் துறையில் பெண்களின் பங்களிப்பு ஒரு புதிய பரிமாணத்தை எட்டியுள்ளதாகக் கருதப்படுகிறது.











# எமது நெல்லை எமது மாகாணத்திலேயே அரிசியாக்கி விநியோகிக்க நடவடிக்கை!

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

“வடக்கு மாகாணத்தில் உற்பத்தியாகும் நெல், வேறு மாகாணங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து அரிசியாக மாற்றப்பட்டு மீண்டும் எமது மாகாணத்துக்கே விற்பனைக்கு வருகின்றது. இதனால் எமது விவசாயிகளும், நுகர்வோரும் பாதிக்கப்படுகின்றனர். இந்நிலையை மாற்றியமைத்து, எமது நெல்லை எமது மாகாணத்திலேயே அரிசியாக்கி விநியோகிப்பதற்குத் தனியார் மற்றும் கூட்டுறவுத்துறை ஆலைகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுப்போம்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்திலுள்ள தனியார் மற்றும் கூட்டுறவுத்துறை அரிசி ஆலை உரிமையாளர்கள், அரச மற்றும் தனியார் வங்கிப் பிராந்திய முகாமையாளர்கள் ஆகியோருடனான விசேட கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஆளுநர் மேலும் கூறியதாவது:–

“எமது மாகாணத்தின் தேவைக்கு மேலதிகமாகவே நெல் உற்பத்தி செய்யப்படுகின்றது. உபரியான நெல்லை வெளியே அனுப்புவதில் தவறில்லை. ஆனால், எமது மக்களின் தேவைக்கான நெல்லையும் வெளியே அனுப்பிவிட்டு, அதையே மீண்டும் அரிசியாக அதிக விலைக்கு வாங்குவது ஆரோக்கியமானதல்ல. உள்ளூர் அரிசி ஆலை உரிமையாளர்களுக்குப் போதிய கடன் வசதிகளை வழங்கி, அவர்கள் ஊடாக நெல்லைக் கொள்வனவு செய்யவும், அதனை இங்கேயே அரிசியாக மாற்றவும் நாம் முயற்சிக்கின்றோம்.” – என்றார்.

விவசாயிகள் நெல்லை அறுவடை செய்யும் காலப்பகுதியிலேயே அரிசி ஆலை உரிமையாளர்களுக்குப் போதியளவு பணம் தேவைப்படுகின்றது. எனினும், அக்காலப்பகுதியில் வங்கிக் கடன்கள் கிடைப்பதில் தாமதம் நிலவுவதாக ஆலை உரிமையாளர்கள் சுட்டிக்காட்டினர். இதனைக் கருத்திற்கொண்டு, அடுத்த போகத்திலிருந்தாவது உரிய காலத்தில் வங்கிக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கான பொறிமுறையை உருவாக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அரிசி ஆலைகளுக்குப் போதியளவு உலர்த்திகள் இல்லாமை பெரும் குறைப்பாடாக உள்ளது. உலர்த்திகளைக் கொள்வனவு செய்வதற்கு வங்கிகள் ஊடாக வழங்கக்கூடிய கடன் சலுகைகள் தொடர்பில் இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது. மேலும், வடக்கு மாகாணத்தில் தற்போதுள்ள உலர்த்திகள் மற்றும் களஞ்சிய வசதிகள் தொடர்பான தரவுகளைத் திரட்டி, எதிர்காலத் தேவைகளைத் திட்டமிடவும் முடிவு செய்யப்பட்டது.

விவசாயிகள் உரிய பருவ காலத்திற்கு முன்னரே நெல்லை அறுவடை செய்வதால், அரிசி ஆலை உரிமையாளர்கள் தரம் சார்ந்த சவால்களை எதிர்கொள்கின்றனர். எனவே, முற்றிய நிலையில் நெல்லை அறுவடை செய்வதன் நன்மைகள் குறித்தும், நவீன நெல் நடுகை முறைகள் குறித்தும் விவசாயிகளுக்குத் தெளிவூட்டல் வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர், அரச மற்றும் தனியார் வங்கிகளின் பிராந்திய முகாமையாளர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் ஆளுநரின் ஆலோசனைக்குழு உறுப்பினர் கலாநிதி அகிலன் கதிர்காமர் தலைமையிலான குழுவினரும் கலந்துகொண்டனர்.




# இனங்களை ஒருங்கிணைக்க வேண்டிய தேசியக்கொடி இனங்களுக்கிடையில் பிரிவினையையே ஏற்படுத்தியது

## ஐங்கரநேசன் விசனத்துடன் சுட்டிக்காட்டு

இலங்கை சுதந்திரம் அடைந்தபோது விக்கிரமராசசிங்க மன்னனின் சிங்கக் கொடியே தேசியக் கொடியாக ஏற்றப்பட்டது. சிங்கள மக்களை மட்டுமே பிரதிநிதித்துவம் செய்த இந்தக் கொடியைத் தமிழ் – முஸ்லிம் தலைவர்கள் ஆட்சேபித்தமையால் கொடியின் ஓரத்தில் தமிழ் மக்களைக் குறிக்கச் செம்மஞ்சள் நிறப் பட்டியும் முஸ்லிம் மக்களைக் குறிக்கப் பச்சை நிறப் பட்டியும் சேர்க்கப்பட்டன. ஆனால், சிங்கள மக்களைக் குறிக்கும் சிவப்பு வர்ணமே கொடியில் பெரும்பங்கு இடம் பெற்றது. பௌத்தக் குறியீடுகளும் இடம்பெற்றன. மூவின மக்களுக்கும் சமமான பிரதிநிதித்துவம் இல்லாது சிங்கள மக்களுக்கான கொடியாகவே தேசியக்கொடி வடிவமைக்கப்பட்டது. இதனால், இனங்களை ஒருங்கிணைப்பதற்குப் பயன்படவேண்டியதேசியக்கொடிஇனங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்தியதன் தொடக்கமாக அமைந்தது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் சுதந்திர தினமான கடந்த 4ஆம் திகதி 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்ற கருப்பொருளில் யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் தமிழ்த் தேசியப் பேரவையின் கருத்தமர்வு நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் உரையாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றிய போது கூறியவை வருமாறு:-



இலங்கைத் தீவின் வரலாற்றுக் காலத்தில் சிங்கம் ஒருபோதும் வாழ்ந்ததாக அறியப்படவில்லை. சிங்கள மக்கள் தமது வரலாற்று நூலாகக் கொண்டாடும் மகாவம்சத்தின் அடிப்படையிலேயே சிங்கள மக்களின் குறியீடாகச் சிங்கம் விக்கிரமராசசிங்க மன்னன் காலம்தொடக்கம் கொடிகளில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. ஆரம்பத்தில் கொடிக்கம்பத்துக்கு எதிர்ப்புறமாக, வலப்பக்கம் நோக்கியிருந்த சிங்கம் தமிழ் – முஸ்லிம் மக்களைக் குறிக்கும் நிறப்பட்டிகள் சேர்க்கப்பட்டதன் பின்னர் அவற்றை நோக்கித் திருப்பப்பட்டது. தேசியக் கொடியின் வடிவமைப்புக் குழுவில் அங்கத்துவம் வகித்த செனட்டர் நடேசன் கொடியில் இனப்பாகுபாட்டைக் கடுமையாக எதிர்த்தார். இது பிரிவினை வாதத்துக்கு வழிகோலும் என்று எச்சரித்தார். ஆனால், பேரினவாதம் அதனை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கவில்லை.

இலங்கையின் தேசியக்கொடியில் இலங்கையில் காணப்படாத சிங்கத்தை வாளேந்த வைத்ததன் பின்னர் இலங்கை அரசால் இன்னுமொரு விலங்கைத் தேசிய விலங்காக இதுவரை அறிவிக்க முடியவில்லை. இலங்கைக் காடுகளில் காணப்படும், இலங்கைக்கு மட்டுமே உரித்தான சிறுத்தைப்புலியே தேசிய விலங்காகத் தெரிவு செய்வதற்கு மிகப்பொருத்தமானது. ஆனால், விடுதலைப் புலிகள் தங்களது சின்னமாகப் புலியைத் தெரிவு செய்தார்கள் என்ற ஒரே காரணத்துக்காகச் சிறுத்தைப் புலியைத் தேசிய விலங்காக அங்கீகரிப்பதற்கு இலங்கை அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது. வாளேந்திய சிங்கம் தங்களை அடக்கியொடுக்குவதாகத் தமிழ் மக்கள் உணர்ந்ததாலேயே தங்களுக்கான தனியான ஒரு சின்னத்தைத் தேடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்பதை இலங்கை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி அரசியல்வாதிகள் இலங்கைத் தீவில் வாழுகின்ற அனைத்து மக்களும் சமமாகவே நடத்தப்பட்டு வருகிறார்கள் என்று பேசிவருகிறார்கள். இவர்கள் மனித உரிமைகளைப் பற்றியே பேசுகிறார்கள். இந்த சமத்துவம் உலகமக்கள் அனைவருக்கும் பொதுவானது. ஆனால், நாம் அவாவி நிற்பது இனங்களுக்கிடையிலான சமத்துவம். நாங்கள் நாடோடி மக்கள் கூட்டம் அல்லர். இலங்கைத்தீவில் நாம் ஒரு தனித்துவமான தேசிய இனம். ஒரு தேசிய இனத்துக்கென அங்கீகரிக்கப்பட்ட சுயநிர்ணய உரிமையையே நாம் கோரி வருகின்றோம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தாங்கள் பேசிவருகின்ற சமத்துவம் இனங்களுகிடையிலான சமத்துவம்தான் என்று சொன்னால், தேசியக்கொடியில் சமத்துவமான மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலமே மக்களுக்கு அதனை மெய்ப்பிக்க முடியும். – என்று தெரிவித்தார்.





# இரவில் சுழியோடி கடல் அட்டைகளை சட்டவிரோதமாகப் பிடித்த 7பேர் கைது

## இரணைதீவுக்கு வடக்கேயுள்ள கடற்பரப்பில் சம்பவம்

கிளிநொச்சி, இரணைதீவுக்கு வடக்கேயுள்ள கடற்பரப்பில் இரவு நேரத்தில் சுழியோடி கடல் அட்டைகளை சட்டவிரோதமாகப் பிடித்த 07 சந்தேக நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்

இலங்கை கடற்படையினர், கிளிநொச்சியின் இரணைதீவின் வடக்கு கடல் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக இரவு நேர சுழியோடி நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் எனக் கருதப்படும் ஏழு பேரை 335 கடல் அட்டைகள், இரண்டு டிங்கி படகுகள் மற்றும் சுழியோடி உபகரணங்களுடன் கடற்படையினர் கைது செய்தனர்.

கைதான சந்தேக நபர்கள் 23 முதல் 36 வயதுக்குட்பட்ட மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடல் அட்டைகள், டிங்கி படகுகள் மற்றும் சுழியோடி உபகரணங்களுடன் சந்தேக நபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி மீன்வள ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# முல்லையில் களஞ்சியங்களில் சிறுபோக நெல் இன்னும் தேங்கிக் கிடப்பதால் நெருக்கடி நிலை

## ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2025ஆம் ஆண்டு சிறுபோகத்தின் போது நெல்சந்தைப்படுத்தல் சபையினால் கொள்வனவுசெய்யப்பட்ட 304 மெற்றிக்தொன் நெல் பயன்டுத்தப் படாமல் களஞ்சியசாலைகளில் நிறைந் திருப்பதால் ஏற்பட்டுள்ள களஞ்சிய சாலை நெருக்கடியினாலேயே நெல்சந் தைப்படுத்தல்சபையினால் தற்போது விவசாயிகளிடமிருந்து நெற்கொள் வனவு மேற்கொள்வதில் தாமதம் ஏற் பட்டுள்ளதாக அறியமுடிவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.



நெல் சந்தைப்படுத்தல் சபையினர் 2025ஆம் ஆண்டு சிறுபோகத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட நெல்லினை உரியவகையில் களஞ்சிய சாலைகளில் இருந்து அகற்றியிருந்தால் தற்போது விவசாயிகளிடமிருந்து நெற்கொள்வனவு மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டிருக்காதெனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், தற்போது அரசால் நெற்கொள்வனவிற்கென நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளபோதும் நெல்சந்தைப்படுத்தல் சபையின் அச மந்தப்போக்கினாலேயே நெற்கொள்வ னவில் தாமதம் ஏற்பட்டு விவசாயிகள் அவதியுறும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் நேற்று ஊடகங்களுக் குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

நெல் சந்தைப்படுத்தல்சபை விவசா யிகளிடமிருந்து நெற்கொள்வனவை விரைந்து ஆரம்பிக்கவேண்டுமென தொடர்ச்சியாக வலியுறுத்தி வரு கின்றேன்.

அந்தவகையில் கடந்த 20.01.2026 நாடாளுமன்றில் நெற்கொள்வனவை விரைந்து ஆரம்பிக்குமாறு வலியுறுத் தியிருந்தேன். அதனைத் தொடர்ந்து கடந்த 21.01.2026அன்று இடம்பெற்ற விவசாய அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக்குழுக்கூட்டத்தில் இதுதொடர்பில் பேசியபோது அமைச்சர் லால்காந்த மற்றும் நெல் சந்தைப் படுத்தல் சபை அதிகாரிகளால் கடந்த 26.01.2026அன்று நெற்கொள்வனவு ஆரம்பிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டி ருந்தது.

அதனைத்தொடர்ந்து 27.01.2026 அன்று இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் நெற்கொள்வனவு தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தேன். அதன்போது மறுநாள் 28ஆம் திகதி யிலிருந்து நெற்கொள்வனவு ஆரம் பிக்கப்படுமென முல்லைத்தீவு மாவட் டசெயலாளர் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசசெயலாளர் ஆகியோரால் பதில் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் நெல் சந்தைப்படுத்தல் சபை இதுவரை நெற்கொள்வனவை ஆரம்பிக்கவில்லை.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத் தில் நெல்சந்தைப்படுத்தல் சபையி னுடைய நெற் களஞ்சியசாலைகளில் ஏற்கனவே கடந்த 2025ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கைக்காலத்தில் கொள்வனவுசெய்த நெல் உரிய வகையில் அகற்றப்படாமல் இருப்பில் இருப்பதாக அறியமுடிகின்றது. இதனா லேயே நெற்கொள்வனவிற்கு கால தாமதம் ஏற்படுவதாகவும் அறிகின் றோம்.

அந்த வகையில் தண்ணீரூற்று நெற் களஞ்சிய சாலையில் 10மெற்றிக் தொன் நெல் இருப்பில் காணப்படுவது டன், புதுக்குடியிருப்பில் 15மெற்றிக் தொன், உடையார்கட்டு 25மெற்றிக் தொன், முள்ளியவளை 100மெற்றிக் தொன், கோம்பாவில் 20மெற்றிக்தொன், வித்தியாபுரத்தில் 130மெற்றிக்தொன் என முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல்சந்தைப் படுத்தல் சபைக்குரிய களஞ்சியசாலைகளில் மொத் 304 மெற்றிக்தொன் நெல் களஞ்சிய சாலைகளின் இருப்பில் தேங்கியுள் ளதாக அறிய முடிகின்றது.

ஏற்கனவே 2025ஆம் ஆண்டு சிறுபோகக் காலத்தில் நெல்சந் தைப்படுத்தல் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டநெல் களஞ்சியங்களில் தேங்கியிருப்பதற்கான காரணம் என்ன?

இவ்வாறு களஞ்சியசாலையில் தேக்கநிலையில் உள்ள நெல்லினை உரியகாலத்தில் வெளியேற்றி களஞ்சி யசாலையை நெற்கொள்வனவிற்கு ஏற்றவாறு நெல் சந்தைப்படுத்தல்சபை தயார்நிலையில் வைத்திருந்திருக்க வேண்டும்.

ஆனால் நெல்சந்தைப்படுத்தல் சபையினர் அசமந்தப்போக்குடன் இருந்ததினாலேயே தற்போது களஞ் சியசாலைகள் இடமின்றி நிறைந்திருக் கின்றன.

எனவே தற்போது நெற்கொள் வனவிற்கென அரசால் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளபோதும் நெல்சந்தைப் படுதனதல் சபையின் அசமந்தப்போக் கால் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவுசெய்வதற்கு களஞ்சிய சாலைகள் இல்லாத நிலை ஏற்பட்டுள் ளது.

இதனால் ஏற்கனவே நெல் சந்தைப் படுத்தல் சபை அதிகாரிகளினால் உறுதியுரைக்கப்பட்டதைப்போன்று விவசாயிகளிடமிருந்து இன்னும் நெற்கொள்வனவு மேற்கொள்ளப்பட வில்லை.


குறிப்பாக குமுழமுனைப்பகுதியில் மாத்திரம் நெல்சந்தைப்படுத்தல் சபை யினர் நெல்தரங்களைப் பார்வையிட்ட துடன், எதிர்வரும் திங்கட்கிழமையிலி ருந்து நெற்கொள்வனவை ஆரம்பிக் கவுள்ளனர் என விவசாயிகளிடம் தெரி வித்துள்ளனர் என அறிகின்றோம்.


இவ்வாறாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் அசமந்தப்போக்கினால் தற் போது விவசாயிகளே பெரிதும் பாதிக் கப்படுகின்றனர்.

குறிப்பாக ஏற்கனவே டித்வா புயல் வெள்ள அனர்த்தங்களினாலும், தொடந்து நிலவும் வானிலையாலும் பாரிய பாதிப்புக்களைச் சந்தித்துள்ள விவசாயிகளுக்கு, நெல்சந்தைப்படுத்தல் சபையின் நெற்கொள்விலும் காலதா மதம் ஏற்படுவது மேலும் அவர்களை பாதிப்பிற்குள்ளாக்குவதாக அமைகின் றது.

எனவே நெல் சந்தைப்படுத்தல் சபையினர் தொடர்ந்தும் அசமந்தப் போக்குடன் செயற்படாமல் விரைந்து விவசாயிகளிடமிருந்து நெற்கொள் வனவைமேற்கொள்ள ஆரம்பிக்கவேண் டும்.

அவ்வாறு விரைவாக நெற்கொள்வ னவை மேற்கொள்ளத் தவறினால் விவசாயிகளுடன் இணைந்து நெல் சந்தைப்படுத்தல் சபைக்கெதிராக பாரிய ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படும் - என்றார்.





-

# இராமகிருஷ்ண மிஷனின் இரு பெரும் துறவியரின் உருவச்சிலைகள் இன்று பூண்டுலோயாவில் திறப்பு

## மத்திய மலையகத்தின் ஆன்மீக - கல்வி வரலாற்றில் புதிய மைல்கல்



- வித்தகர் விபுலமாமணி வி. ரி.சகாதேவராஜா -

மத்திய மலையகத்தின் ஆன்மீக, கல்வி மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்கு புதிய ஒளியைச் சேர்க்கும் வகையில், இராமகிருஷ்ண மிஷனின் இருபெரும் மகத்தான துறவியரான வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் மற்றும் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் ஆகியோரின் திருவுருவச் சிலைகள் பூண்டுலோயாவில் இன்று சனிக்கிழமை நிறுவப்படவுள்ளன.

இது மத்திய மலையகத்தின் வரலாற்றில் நினைவுகூரத்தக்க ஒரு சரித்திர நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது.


உலகளாவிய இராமகிருஷ்ண மிஷனை நிறுவி, இந்திய இந்து ஆன்மீக சிந்தனையை உலக அரங்கில் உயர்த்திய வீரத் துறவி சுவாமி விவேகானந்தர், இளைஞர்களுக்கான விழிப்புணர்வின் சின்னமாகத் திகழ்கிறார்.

அதேவேளை உலகின் முதல் தமிழ் பேராசிரியராகப் போற்றப்படும், இலங்கை கிழக்கு மாகாணத்தில் காரைதீவு என்னும் பழந்தமிழ் கிராமத்தில் அவதரித்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் ஆன்மீகப் பாரம்பரியத்தை உலகளவில் உயர்த்திய பெருமைக்குரிய அறிஞர் துறவி.

இவ்விரு பெரும் துறவிகளின் திருவுருவச்சிலைகள் ஒரே வளாகத்தில் நிறுவப்படுவது ஆன்மீகமும் அறிவும் இணையும் அடையாளமாகக் கருதப்படுகிறது.

அவுஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியத்தின் (ஒஸ்கார் - AusKar) ஏற்பாட்டில் நடைபெறும் இந் நிகழ்வு, இன்று 07ஆம் திகதி சனிக்கிழமை, நுவரேலியா மாவட்டம், கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பூண்டுலோயா சீன் தோட்டம் விவேகானந்த மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த விழா கல்வி, ஆன்மீகம் மற்றும் சமூக சேவையை இணைக்கும் ஓர் அரிய நிகழ்வாக அமைகிறது.




இலங்கைக்கான இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ மஹராஜ் மற்றும் மட்டக்களப்பு மாநில பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் ஆகியோர் பிரதம ஆன்மீக அதிதிகளாக கலந்து கொண்டு சிலைகளை சுப வேளையில் திறந்து வைக்கவுள்ளனர்.

அவர்களின் வருகை இந்த நிகழ்வுக்கு மேலும் ஆன்மீக மரியாதையையும் பெருமையையும் சேர்க்கிறது.

நட்சத்திர அதிதியாக ஒஸ்கார் சார்பில் தாயக இணைப்பாளரும் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா கலந்து கொண்டு விழாவைச் சிறப்பிக்கவுள்ளார்.

மேலும், கொத்மலை வலய கல்வி அதிகாரிகள், அதிபர்கள், முன்னாள் அதிபர்கள் ,மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ச்சி▼

# இராமகிருஷ்ண மிஷனின் இரு பெரும் துறவியரின் உருவச்சிலைகள் இன்று பூண்டுலோயாவில் திறப்பு

தொடர்ச்சி▲

அவுஸ்திரேலியாவில் வாழும் காரைதீவு மக்களின் பங்களிப்பு, குறிப்பாக ஒஸ்கார் அமைப் பின் தலைவர் கந்தசாமி பத்மநாதன் தலைமைத்து வத்தில், செயலாளர் தி.லாவண்யன் மற்றும் இணைப் பாளரும் பொருளாளருமான வீ.விவேகானந்தமூர்த்தி ஆகியோரின் ஒழுங்கமைப்பில் இவ் அனுசரணை மத்திய மலையகத்தின் கல்வி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான உறுதியான ஆதரவாகக் கருதப்படுகிறது.

அண்மையில் டித்வா பேரிடரில் பாதிக்கப்பட்ட கண்டி, கம்பளை, பூண்டுலோயா, பதுளை, பசறை உள்ளிட்ட மலையக மக்களுக்கு ஒரு தொகுதி நிவாரணப் பொருள்களையும் கற்றல் உபகரணங் களையும் ஒஸ்கார் வழங்கி வைத்தது தெரிந்ததே.

மத்திய மலையகத்தில் நுவரேலியா மாவட்டத் தில் திறந்து வைக்கப்படும் இருபெரும் துறவியரின் முதலாவது திருவுருவச்சிலைகள் இவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனால் இந்நிகழ்வு ஒரு சாதாரண திறப்பு விழாவைத் தாண்டி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கலாசார அடையாளமாக உயர்கிறது.

இன்று இந்நிகழ்வை முன்னிட்டு "ஒஸ்காரின் துறவியர் படிவமலர்" எனும் நினைவு மலரும் வெளியிடப்படவுள்ளது. இதில் ஒஸ்காரின் பணிகள், துறவியரின் வாழ்க்கை வரலாறு, அவர்களின் கல்வி மற்றும் ஆன்மீகச் சேவைகள் குறித்து கட்டுரைகள் இடம்பெறுகின்றன.

இந்நினைவு மலர் எதிர்கால தலைமுறைக்கு வழிகாட்டும் ஆவணமாக அமையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

மேலும், ஒஸ்கார் தலைவர் க. பத்மநாதன் அவர்களின் அனுசரணையில், பேரிடர்களால் பாதிக்கப்பட்ட சுமார் 200 மலையக மக்களுக்கு புதிய வஸ்திரங்கள் வழங்கப்படவுள்ளன. ஆசிரியை களுக்கு சீருடை சாறியும் ஒஸ்கார் தலைவர் பத்மநாதன் வழங்கி வைக்கிறார்.

இது சமூகப் பொறுப்புணர்வை வெளிப்படுத்தும் மனிதநேயப் பணியாகக் கருதப்படுகிறது. சமூக சேவை மற்றும் ஆன்மீகச் சேவை இணையும் இந்த நிகழ்வு, ஒற்றுமை மற்றும் கருணையின் செய்தியை வலியுறுத்துகிறது.

அத்துடன் விழாவில் கலந்து கொள்பவர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கும் ஒஸ்கார் ஏற் பாடுகளை செய்துள்ளது.

இச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை வெற்றிகரமாக நடத்த ஒத்தாசை வழங்கிய ஒஸ் கார் உறுப்பினர்கள், பாடசாலை நிர்வாகம், தாயக இணைப்பாளர் மற்றும் ஆதரவாளர்கள் அனை வருக்கும் ஏற்பாட்டாளர்கள் நன்றியைத் தெரி வித்துள்ளனர்.

ஆன்மீக உயர்வு, கல்வி விழிப்புணர்வு, சமூக ஒற்றுமை ஆகிய மூன்றையும் இணைக்கும் இந்தச் சிலை நிறுவும் விழா, மத்திய மலையக மக்களின் பண்பாட்டு நினைவுச் சின்னமாகவும் எதிர்கால தலைமுறைக்கு ஊக்கமளிக்கும் கலங்கரை விளக்கமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.





# தொடர்ச்சியான தொழிற்சங்கப் போராட்டத்திற்கு தயாராகிறது யாழ் பல்கலை ஊழியர்கள் சங்கம்

## ஊடக அறிக்கையில் எச்சரிக்கை தெரிவிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நீண்ட கால நிர்வாக முறைகேடுகள் மற்றும் தாமதங்கள் தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தொடர்ச்சியான தொழிற்சங்கப் போராட்டம் பற்றிய எச்சரிக்கையையும் அதில் தெரிவித்துள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூக விரோதச் செயற்பாடுகள், நிர்வாக முறைகேடுகள், ஊழியர் மற்றும் மாணவர் நலன் சார் விடயங்களில் காட்டப்படும் நீண்டகால தாமதங்கள் மற்றும் வழங்கப்படும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை குறித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தொடர்ச்சியாக கடுமையான கண்டனங்களையும், போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது.

மேற்படி விடயங்களைச் சீர்செய்வது தொடர்பில் கடந்த மார்ச் 2025 முதல் பல தடவைகள் இடம்பெற்ற கலந்துரையாடல்களில் பல விடயங்கள் சீர்செய்யப்படும் எனவும், நடைமுறைப்படுத்தப்படும் எனவும் வாக்குறுதியளித்த போதும் அவை பதிவாளரினால் தாமதப்படுத்தப்படுவதாக துணைவேந்தர் வெளிப்படுத்தியிருந்தார்.

இருப்பினும் துணைவேந்தர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர் மீது கொண்ட நம்பிக்கை காரணமாக நாம் போதுமான கால அவகாசங்களை வழங்கி பல விட்டுக்கொடுப்புகளைச் செய்திருந்தோம்.

இறுதியாக 2025 நவம்பர் 25ஆம் திகதி துணைவேந்தர் உள்ளிட்ட நிறைவேற்று அதிகாரிகளுடன் மேற்



பல்கலைக்கழக ஊழியர் சங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஊடக அறிக்கை : 06.02.2026

நீண்ட கால நிர்வாக முறைகேடுகள் மற்றும் தாமதங்கள் தொடர்பான எச்சரிக்கையும் தொடர்ச்சியான தொழிற்சங்கப் போராட்டமும்

தலைவர்
பல்கலைக்கழக ஊழியர் சங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் எட்டப்பட்ட உடன்பாடுகளில் பெரும்பாலானவை தை மாதத்திற்கிடையில் நடைமுறைப்படுத்தப்படும் என துணைவேந்தர் எழுத்து மூலம் உறுதி வழங்கியிருந்தார். ஆயினும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் காணப்படும் நிரந்தர வெற்றிடங்களை முழுமையாக நிரப்புதல், தற்காலிக நியமனங்களில் காணப்படும் முறைகேடுகள், கிளிநொச்சி வளாக ஊழியர்களின் பிரச்சினைகள், உள்ளக நியமனங்கள், பதவி உயர்வுகள், மேலதிக நேரக் கொடுப்பனவு, இடர்கடன் வழங்கல், வருடாந்தப் படி உயர்வு, ஓய்வு பெற்ற ஊழியர்களின் கொடுப்பனவுகள், ஊழியர் மற்றும் மாணவர் நலன் சார் சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகள் வழங்குதல் தொடர்பில் மாத்திரமன்றி கடமையின் போது உயிரிழந்த ஊழியருக்கான கொடுப்பனவுகள் கூட வருடம் கடந்தும் இதுவரை வழங்கப்படாது தாமதப்படுத்தப்பட்டுவருகின்றமை எம்மை மிகவும் கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது.

இவை தொடர்பில் ஏற்கனவே 28.10.2025 அடையாள வேலை நிறுத்தம் ஒன்றினை மேற்கொண்ட போது துணைவேந்தர் வழங்கிய உத்தரவாதத்திற்கமைய அவர் மீது கொண்ட அதீத நம்பிக்கையாலும், பல்கலைக் கழகத்தின் மாண்பைப் பேணுவதற்காகவும், சமூக அக்கறையாலும் இன்றுவரை அமைதி காத்து வந்தோம். ஆயினும், எமது பொறுமையினை பலவீனமாக கருதுவதால் 05.02.2026 அன்று மீண்டும் ஓர் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டமையோடு, 2026 பெப்ரவரி 09 இற்கு முன்னர் மேற்கண்ட விடயங்களில் சாதகமான தீர்வுகள் வழங்கப்படாவிடின், 2026 பெப்ரவரி 10 முதல் தொடர்ச்சியான தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட உள்ளமையோடு பட்டமளிப்பு விழா கடமைகளில் இருந்தும் முழுமையாக விலகுவது எனவும் தீர்மானித்துள்ளோம்.

இதனால் எமது சமூகத்திற்கும் மாணவர்களுக்கும் ஏற்படும் அசௌகரியங்களுக்காக எமது ஆழ்ந்த மன வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

– இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசத் துரோகிகளாக அறிவிக்கப்பட்ட முஸ்லிம் வீரர்களை தேசப் பற்றார்களாக அறிவிக்க அரசுத் தரப்பில் இணக்கம்

## ஹிஸ்புல்லாஹ் எம்.பியின் முயற்சிக்கு சாதகமான பதில்

காலனித்துவ ஆட்சிக்கெதிராகப் போராடிய பல முஸ்லிம் வீரர்கள், ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் 'தேசத் துரோகிகள்' என முத்திரை குத்தப்பட்டிருந்த நிலையில், அவர்களை உரிய வகையில் தேசப் பற்றாளர்களாக அங்கீகரிக்க வேண்டிய இணக்கப்பாடு ஒன்று தற்போது உருவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் நேற்று நாடாளுமன்றத்தில் அமைச்சர்கள் பிமல் ரத்நாயக்க மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி ஆகியோரை தனித்தனியே சந்தித்து கலந்துரையாடியமையை அடுத்து இதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது.



முதற்கட்டமாக அவர் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவைச் சந்தித்து இவ்விவகாரம் தொடர்பில் விரிவான விளக்கங்களை முன்வைத்தார். இதன்போது, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஊடாக இவ்விடயத்தை முன்னெடுத்து நடவடிக்கை எடுப்பது குறித்து தீர்மானிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவர் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவியைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இவ்விவகாரம் தொடர்பான முழுமையான ஆவணங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள் உள்ளிட்ட தேவையான அனைத்து தகவல்களையும் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி அவர்களிடம் அவர் கையளித்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், குறித்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதியளித்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ்வின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இந்த விவகாரம் குறித்து, ஹிஸ்புல்லாஹ் இதற்கு முன்னரும் பல தடவைகள் நாடாளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் விரிவாக கருத்துகளை முன்வைத்து, தொடர்ச்சியாக குரல் எழுப்பி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



# சாமி மலை கவரவலை தோட்டத்தில் நேற்று 2 ஆம் நாளாகத் தொடரும் சத்தியாக்கிரகம்

**(மஸ்கெலியா: செ.தி.பெருமாள்)**

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட சாமி மலை பகுதியில் உள்ள ஹொரண பெருந்தோட்டயாக்கத்திற்கு உரித்தான கவரவலை தோட்டத்தில் தோட்ட முகாமையாளரினால் தான் தோன்றித்தனமாக பணி இடைநிறுத்தம் செய்யபட்ட 8 தொழிலாளர்களுக்கும் மீண்டும் வேலை வழங்கக் கோரி இரண்டாவது நாளாக சத்தியாக்கிரகம் தொடருகின்றது.

நேற்று முன்தினம் 5 ஆம் திகதி காலை 7.30 மணி முதல் அதே தோட்டத்தில் உள்ள ஆலய வளாகத்தில் இரவு பகலாக அந்தத் தொழிலாளர்கள் எண்மரும் தொழிற் சங்க பேதமின்றி ஒன்றுபட்டு சத்தியாக்கிரகம் மேற் கொண்டு வருகின்றனர்.

இவர்களுக்கு ஆதரவாக நேற்று முன்தினம் 5 ஆம் திகதி கவரவலை தோட்டத்தைச் சேர்ந்த நான்கு பிரிவுகளில் உள்ள அனைத்து தொழிலாளர்களும்



பணி பகிஸ்கரிப்பு மேற்கொண்டனர்.

பாதிக்கப்பட்ட 8 தொழிலாளர்களுக்கும் பணி நிறுத்தப்பட்ட 44 நாள்களின் வேதனத்துடன் மீண்டும் தொழில் வழங்கும் வரை பணிக்கு செல்வதில்லை என கோரிக்கை முன் வைத்து இந்தப் பணி பகிஸ்கரிப்பை ஏனைய தொழிலாளர்கள் மேற் கொண்டு வருகின்றனர்.

நேற்றைய தினம் தொழிலாளர்கள் சார்ந்த தொழிற் சங்கவாதிகள் அங்கு சென்று தொழிலாளர்களுக்கு ஆதரவு வழங்கினர்.

குறிப்பாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் செயலாளர் தேசிய அமைப்பாளர், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உதவித் தலைவர் மற்றும் மாவட்ட பிரதிநிதி, அண்ணா சந்திரசேகரன் தொழிலாளர் கட்சி தலைவர், தேசிய மக்கள் சக்தி கட்சியின் மஸ்கெலியா பிரதேச சபை உறுப்பினர், மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பலர் கலந்து கொண்டு சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டோருடன் பேச்சு நடத்தினர்.

இன்று காலை ஹட்டன் வலய பொலிஸ் தலைமை அதிகாரி காரியாலயத்தில் கவரவலை தோட்ட முகாமையாளர் மற்றும் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட 8 தொழிலாளர்கள், அவர்கள் சார்ந்த தொழிற் சங்க அதிகாரிகள் மத்தியில் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்த ஹட்டன் வலய பொலிஸ் தலைமை அதிகாரி நடவடிக்கை எடுத்து உள்ளார்.









# மேகாலயா சுரங்க வெடி விபத்து: பலி எண்ணிக்கை 25 ஆக உயர்வு

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மேகாலயாவில் சட்டவிரோத நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 25 ஆக அதிகரித்துள்ளது.

வெடிப்பு நடந்த இடத்திலிருந்து மொத்தம் 25 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என உள்ளூர் பொலிஸார் ஒரு அறிக்கையில் உறுதிபடுத்தினர்.

அனர்த்தத்தில்மேலும்எட்டுபேர்காயமடைந்தனர் என வெடிப்பு நடந்த கிழக்கு ஜெயின்டியா ஹில்ஸ் மாவட்டத்தின் உயர் அதிகாரி மணீஷ் குமார் தெரிவித்தார்.

வெடிப்பு நடந்த நேரத்தில் சுரங்கத்திற்குள் இருந்த தொழிலாளர்களின் சரியான எண்ணிக்கை இன்னும் உறுதியாகத் தெரியவில்லை.

இதனால் மேலும் பலர் சுருங்கத்தில் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இந்த சம்பவம் டைனமைட் வெடிப்பால் ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படும் நிலையில் தடயவியல் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்தம் இரு தரப்பு உறவுகளில் புதிய அத்தியாயம்

## எஸ். ஜெய்சங்கர் தெரிவிப்பு




இந்தியா – அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தில் உள்ளதாகத் தெரிவித்துள்ள வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், இந்த ஒப்பந்தம் இரு தரப்பு உறவுகளில் புதிய அத்தியாயத்தை தொடங்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தலைநகரில் நடைபெற்ற அரிய வகை கனிமங்கள் தொடர்பான 50 இற்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்ற சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்ட இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், மாநாட்டின் இடையே அமெரிக்க நிதி அமைச்சர் ஸ்காட் பெசென்ட்,வெளியுறவுஅமைச்சர்மார்கோ ரூபியோ ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

இந்தியா – அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் அறிவிப்பை அடுத்து இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பு குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள ஜெய்சங்கர்,

“எனதுஅமெரிக்கப்பயணம்பயனுள்ளதாகவும், நேர்மறையானதாகவும் இருந்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்திய – அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம், அதன் விவரங்களை இறுதி செய்யும் கட்டத்தில் உள்ளது. அது விரைவில் நிறைவடையும். இது நமது இருதரப்பு உறவுகளில் புதிய அத்தியாயத்தைத் திறக்கிறது. மேலும், பரந்த சாத்தியக்கூறுகளை வழங்குகிறது.” என தெரிவித்துள்ளார்.

அரிய வகை கனிமங்கள் குறித்துப் பேசிய ஜெய்சங்கர்,

“அரிய வகை கனிமங்கள் மீதான நமது ஒத்துழைப்பும் வேகமாக முன்னேறி வருகிறது. வரும் நாள்களில், இரு தரப்பு பிரச்சினைகள், பாதுகாப்பு மற்றும் எரிசக்தி சார்ந்த பிரச்சினைகள் குறித்த பேச்சுவார்த்தைகளை எதிர்பார்க்கிறோம். ஒட்டுமொத்தமாக ஒரு வலுடான உத்வேகம் தெளிவாகத் தெரிகிறது.” என குறிப்பிட்டுள்ளார்.

ஸ்மார்ட்போன்கள் தயாரிப்பு முதல் விமானங்கள் தயாரிப்பு வரை பயன்படும் அரிய வகை கனிமங்களை தற்போது சீனாதான் அதிக அளவில் உற்பத்தி செய்து வருகிறது. உலக அளவிலான விநியோகத்தில் சீனாவின் பங்கு 60 சதவீதத்தை சீனா கொண்டுள்ளது.

இந்நிலையில், சீனாவுக்குப் போட்டியாக அரிய வகை கனிமங்களின் உற்பத்தி, விலை, உலக சங்கிலி ஆகியவற்றை தீர்மானிப்பது தொடர்பாக அமெரிக்கா இந்த மாநாட்டுக்கு ஏற்பாடுகளை செய்திருந்தது. இதில், இந்தியா உட்பட 50 இற்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.







# இஸ்லாமாபாத்தில் மசூதியில் தற்கொலைப் படை தாக்குதல்

## 31 பேர் உயிரிழப்பு, 169 பேர் காயம்

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமைந்துள்ள மசூதியில் தனியொருவர் நடத்திய தற்கொலைப் படை தாக்குதலில் 31 பேர் உயிரிழந்துள்ளனர். 160 பேர் காயமடைந்துள்ளனர். இந்த குண்டுவெடிப்பு சம்பவம் வெள்ளிக்கிழமை தொழுகையின்போது நிகழ்ந்துள்ளது.

இஸ்லாமாபாத்தின் ஷெஷாத் டவுன் பகுதியில் இந்த தாக்குதல் நடந்துள்ளது. இந்தப் பகுதியில் அமைந்துள்ள மசூதியின் வளாகத்துக்குள் நுழைய ஒருவர் முயன்றுள்ளார். அவரை பாதுகாப்பு பணியில் இருந்த பொலிஸார் தடுத்து நிறுத்தி உள்ளனர். அதன்பிறகு அவர் வெடிகுண்டை வெடிக்க செய்துள்ளார். இதில் 31 பேர் உயிரிழந்தனர், 169 பேர் காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு இதுவரை எந்தவொரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இந்நிலையில், தாக்குதலை மேற்கொண்டவர் வெளிநாட்டை சேர்ந்தவர் என அந்நாட்டு பொலிஸ் வட்டாரத்தில் இருந்து தகவல் வெளியாகி உள்ளது.

இதன் பின்னணியில் தெஹ்ரீக்-இ-தலிபான்-பாகிஸ்தான் (டி.டி.பி) தீவிரவாத படையின் சதி இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். குண்டுவெடிப்பு நடந்த இடத்தில் பொலிஸார் மற்றும் மீட்பு படையினர் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இஸ்லாமாபாத்தில் அமைந்துள்ள நீதிமன்றத்துக்கு வெளியே கார் குண்டுவெடிப்பு தாக்குதல் நடந்தது. அதில் 12 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

மசூதியில் நடந்த தற்கொலைப்படை தாக்குதலுக்கு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், எதிர்க்கட்சி தலைவர் அல்லாமா ராசா நசீர் அப்பாஸ் உள்ளிட்டோர் தங்களது கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

"வழிபாட்டு இடங்களில் நடைபெறும் தாக்குதல் என்பது மனிதத்தின் மீதும், சமூகத்தின் மீதும், மதத்தின் மீதும் நேரடியாக நடத்தப்படுகின்ற தாக்குதல் ஆகும். இதை எந்த சூழலிலும் சகித்துக் கொள்ள முடியாது" என அல்லாமா ராசா நசீர் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலில் இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தானுக்கு தொடர்பு இருப்பதாக பாகிஸ்தான் பாதுகாப்பு துறை அமைச்சர் கவாஜா ஆசிப் குற்றச்சாட்டு வைத்துள்ளார். மேலும், இதற்கு நிச்சயம் அரசு தரப்பு தக்க பதிலடி தரும் என அவர் தெரிவித்துள்ளார்.



# ரஷ்யாவின் உயர் இராணுவ அதிகாரி அலெக்ஸீயேவ் மீது துப்பாக்கிச் சூடு!



ரஷ்ய இராணுவத்தின் மிக உயர்ந்த பதவியில் உள்ள லெப்டினன்ட் ஜெனரல் விளாடிமிர் அலெக்ஸீயேவ், மொஸ்கோவில் பலமுறை சுடப்பட்டு படுகாயமடைந்துள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மொஸ்கோ நகரின் வடமேற்கு புறநகர்ப் பகுதியில் உள்ள குடியிருப்பு கட்டடம் ஒன்றில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலைத் தொடர்ந்து அவர் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனினும், அவரது தற்போதைய உடல்நிலை குறித்த விபரங்கள் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

லெப்டினன்ட் ஜெனரல் விளாடிமிர் அலெக்ஸீயேவ், ரஷ்ய இராணுவ பொதுப் பணியாளர்களின் முக்கிய இயக்குநரகத்தின் மூத்த அதிகாரியாவார்.

2018 ஆம் ஆண்டு பிரித்தானியாவின் சாலிஸ்பரி நகரில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பின்னால் இந்த அமைப்பு இருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டதைத் தொடர்ந்து, இவர் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடைகளை விதித்திருந்தது.

உக்ரைன் மீதான முழு அளவிலான ஆக்கிரமிப்பு ஆரம்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் நிறைவடையும் நிலையில், ரஷ்ய தலைநகரில் இலக்கு வைக்கப்பட்டுள்ள மிக உயர்ந்த இராணுவ அதிகாரிகளில் இவரும் ஒருவராவார்.

## ஜப்பானியத் தேர்தல்:

# சனாயே டகாயிச்சிக்கு ட்ரம்ப் பகிரங்க ஆதரவு



ஜப்பானில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள திடீர் பொதுத் தேர்தலுக்கு முன்னதாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தற்போதைய பிரதமர் சனாயே டகாயிச்சிக்கு தனது முழுமையான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

தனது ட்ரூத் சோஷியல் தளத்தில் பதிவிட்டுள்ள டிரம்ப், அவர் ஏற்கனவே ஒரு வலுவான, சக்திவாய்ந்த மற்றும் புத்திசாலித்தனமான தலைவராகத் தன்னை நிரூபித்துள்ளார் என டகாயிச்சியை பாராட்டியுள்ளார்.

தனது நாட்டை உண்மையாக நேசிக்கும் ஒரு தலைவர்... அவர் ஜப்பானிய மக்களைக் கைவிட மாட்டார்! எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், எதிர்வரும் மார்ச் 19 ஆம் திகதி டகாயிச்சியை வெள்ளை மாளிகைக்கு வரவேற்பதற்கும் தான் ஆவலுடன் இருப்பதாக ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதிகள் பொதுவாகப் பிற நாடுகளின் உள்நாட்டுத் தேர்தல்களில் வேட்பாளர்களை ஆதரிப்பதில்லை. எனினும், ட்ரம்ப் இதற்கு முன்னர் அர்ஜென்டினாவின் ஜேவியர் மிலி மற்றும் ஹங்கேரியின் விக்டர் ஓர்பன் ஆகியோரை ஆதரித்திருந்த நிலையில், தற்போது ஆசியாவின் முக்கிய நட்பு நாடான ஜப்பானியப் பிரதமருக்கும் தனது ஆதரவை வழங்கியுள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதம் ஜப்பானின் முதல் பெண் பிரதமராகப் பதவியேற்ற 64 வயதான சனாயே டகாயிச்சி, ட்ரம்புடன் மிகவும் நெருக்கமான உறவைப் பேணி வருகிறார்.

ட்ரம்ப்பின் 25 வீத வரி விதிப்பு அச்சுறுத்தலைத் தொடர்ந்து, ஜப்பான் அமெரிக்காவில் 550 பில்லியன் டொலர் முதலீடு செய்ய ஒப்புக்கொண்டது. பதிலுக்கு அமெரிக்கா இறக்குமதி வரியை 15 வீதமாகக் குறைத்தது.

பாதுகாப்புச் செலவீனங்களை அதிகரிக்க வேண்டும் என்ற ட்ரம்ப்பின் கொள்கைக்கு டகாயிச்சி இணக்கம் தெரிவித்துள்ளார்.

டகாயிச்சியின் கடும்போக்குக் கொள்கைகள் சீனாவிற்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளன.

தாய்வான் மீது சீனா தாக்குதல் நடத்தினால் ஜப்பான் இராணுவ ரீதியாகப் பதிலடி கொடுக்கும் என டகாயிச்சி கடந்த நவம்பரில் தெரிவித்திருந்தார்.

இந்த கருத்துக்களுக்குச் சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள போதிலும், டகாயிச்சி தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள மறுத்துவிட்டார்.

தற்போதைய கருத்துக்கணிப்புகளின்படி, டகாயிச்சியின் தாராளவாத ஜனநாயகக் கட்சி மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் இந்தத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மையுடன் அமோக வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

465 இடங்களைக் கொண்ட பிரதிநிதிகள் சபையில் 300-க்கும் அதிகமான இடங்களை இவர்கள் கைப்பற்ற வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

# இன்றைய ராசி பலன்கள்- 07.02.2026




உங்கள் முயற்சிகளில் விருப்பமான பலன்கள் கிடைக்கும். சில எதிர்ப்பாராத பலன்கள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் பணிகளை நீங்கள் விரைந்து ஆற்றுவீர்கள். கொடுக்கப்பட்ட பணிகளை எளிதாக விரைவில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்துகொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று நீங்கள் ஆற்றலுடன் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் சுமாராக இருக்கும். இன்று உங்களிடம் அவநம்பிக்கை உணர்வு காணப்படும். முக்கிய முடிவுகளால் நற்பலன்கள் கிடைக்காது. தன்னம்பிக்கை குறைந்திருக்கும்.

இன்று பணியிடத்தில் வளர்ச்சி காணப்படாது. பணிகளில் தவறுகள் காரணமாக பனியின் தரம் குறையும். அதனால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

உணர்ச்சி வசப்படுவதால் உறவில் நல்லிணக்கம் குறையும். எனவே அதனை சரி செய்து மகிழ்ச்சியை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக காணப்படாது. தேவையற்ற பொறுப்புகளுக்காக பணத்தை செலவு செய்வீர்கள். எனவே பணத்தை கையாளும்போது கவனம் தேவை.இன்று தொண்டை சம்பந்தமான தொற்றுகள் ஏற்படலாம்.




இன்று உங்களின் உற்சாகம் குறைந்திருக்கும். அதை அதிகப் படுத்திக் கொள்ளுங்கள். மகிழ்ச்சியற்ற சில சூழ்நிலைகள் உருவாகும். எனவே திட்டமிட்டு அதன் படி செயலாற்ற வேண்டும்.

அதிகப் பணிகள் காரணமாக உங்கள் செயல் திறன் பாதிக்கும். இதனை சிறப்பாக திட்டமிட வேண்டியது அவசியம்.

குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் காரணமாக உங்கள் துணையுடன் மோதல்கள் ஏற்படும். எனவே அவருடனான வேறுபாட்டை பேசி சரி செய்து கொள்ள வேண்டும்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது.எனவே கவனமாக இருக்க வேண்டும்.




இன்று உங்களால் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள இயலும் என்பதால் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இன்று வளர்ச்சி காணப்படும்.

பணியில் மிகுந்த திருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள். அவருடன் சிறந்த முறையில் தொடர்பு கொள்வீர்கள். உறவில் அன்பு பெருகும்.

உங்களிடம் உள்ள பணம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் காணப்படும். இன்று அதிகம் சம்பாதிப்பீர்கள்.




இன்று அமைதியின்மை காணப்படும். இன்று கவனமுடன் செயலாற்ற வேண்டும். நம்பிக்கை தரும் எண்ணங்களை வளர்த்துக் கொள்வது உங்கள் கையில் தான் உள்ளது.

பணிகளைப் பொருத்தவரை உங்களுக்கு குறைவான வாய்ப்புகளே காணப்படும். அதிக பணிகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். மகிழ்ச்சியான உணர்வுகளை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்ளும் வகையில் அனுசரித்து நடந்து கொள்ளுங்கள். இன்று அதக பணம் சம்பாதிக்க இயலாது. உங்களுக்கு தேவைப்படும் பணத்தை பெற இயலாது.இன்று தலைவலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று அவநம்பிக்கை உணர்வு கானபப்டும். உங்கள் செயலில் நேர்மை அவசியம். மன அழுத்தத்தை சமாளிக்க இன்றைய நாளை அனுபவித்து மகிழுங்கள். தியானம் மேற்கொள்வது நல்லது.

இன்று பணிகள் இறுக்கமாகக் காணப்படும். பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் பணியில் தாமதங்கள் காணப்படும். உங்கள் பணிகளை தொழில் சார்ந்த முறையில் செய்வதற்கு திட்டமிட வேண்டும்.

இன்று உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும் என்பதால் உங்கள் துணையிடம் பேசும் போது கவனம் தேவை.




இன்று கிடைத்ததைக் கொண்டு திருப்தியுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும். இன்று உங்கள் இலக்குகளை அடைய கடுமையாக உழைக்க வேண்டும். முக்கியமான செயல்களை தள்ளிப்போடுவது சிறந்தது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாத காரணத்தால் உங்கள் மனதில் கவலை ஏற்படும்.

இன்று எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். அதனை தவிர்த்து உங்கள் துணையிடம் நகைச்சுவை அணுகுமுறை கொள்ள வேண்டும்.

உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.




இன்று நம்பிக்கை நிறைந்து காணப்படும். முன்னேற்றகரமான நாள். இன்று தைரியமும் உறுதியும் அதிகமாக காணப்படும்.

உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்களுக்கென்று ஒரு தரத்தை நிர்ணயம் செய்து கொண்டு அதனை உங்கள் பணிகளில் வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் காதல் உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்க காண்பீர்கள். அதனை நல்ல காரியங்களுக்காக பயன்படுத்துவீர்கள்.உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள்- 07.02.2026





இன்று நம்பிக்கை நிறைந்து காணப்படும். உங்களுடன் தைரியமும் உறுதியும் ஏற்படும். பொதுவாக இன்று முன்னேற்றம் காணப்படும். இது உங்களுக்கு தன்னம்பிக்கை அளிக்கும்.

நீங்கள் இன்று புத்துணர்ச்சியுடனும் வெற்றி பெற வேண்டும் என்ற திட மனதுடனும் காணப் படுவீர்கள். உங்கள் திறமைகள் உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு காணப்படும். இதனால் இருவருக்குமிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று உங்களிடம் பணம் அதிகமாக காணப்படும். இன்று அதிர்ஷ்டம் நிறைந்த நாளாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் திட மன உறுதி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் சாதரணமாக இருக்கும். உங்கள் நடவடிக்கைகளில் பொறுமை கடைபிடிக்க வேண்டும். கடினமான பணிகளை எளிதாக ஆற்றுவது எப்படி என்று கற்றுக் கொள்வது உதவிகரமாக இருக்கும்.

நீங்கள் பணியில் கவனமாகவும் விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும். சிறு தடைகள் உங்கள் நேரத்தை வீணடிக்கலாம். திட்டமிட்டு செயல் பட்டால் சமூகமாக இருக்கும்.

உங்கள் துணையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. அதனை ஒருபக்கம் தள்ளி வைத்து இருவரும் ஒரு பொதுவான முடிவுக்கு வர வேண்டும்.

இன்று உங்களிடம் பணம் குறைவாக காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.




இன்று மந்தமான நாளாக இருக்கும். இன்று உங்கள் தைரியம் குறைந்து காணப்படும். நேர்மறையாக சிந்தித்து மன ஆற்றலுடன் செயல்படு வது நல்லது.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும். சக பணியாளர்களுடனான உறவு சிறப்பாக இருக்காது. அவர்களுடன் உங்கள் அணுகுமுறையை மாற்றி சிறந்த முறையில் பழக வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று பதற்றமுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் கெடும். பிரார்த்தனை மற்றும் தியானம் மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.




இன்று முன்னேற்றகரமான நாள். இன்று நிறைய வாய்ப்புகள் கிடைக் கும். அதனை பயன்படுத்திக்கொள் ளுங்கள். உங்கள் தகவல் தொடர்பு மூலம் நிறைய சாதிப்பீர்கள்.

பணியைப் பொறுத்தவரையில் நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். பயணம் செய்வதற்கான வாய்ப்பு அல்லது வெளி நாடு செல்லும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் முன்னேற்றத்துக்கு இந்த நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் சீரான மனநிலையை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் இனிமையான பேச்சின் மூலம் உங்கள் துணையின் மனதைக் கவர்வீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். குடும்பத்தின் பயனுள்ள தேவைகளுக்காக பணம் செலவு செய்வீர்கள்.









# யாழ் நாள் சத்திர சிகிச்சை நிலையம் நேற்று யாழ்.வைத்தியசாலையில் ஆரம்பித்துவைப்பு

யாழ் நாள் சத்திர சிகிச்சை நிலையம் நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை வளாகத்தில் இயங்கும் மருத்துவ பீட பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக் கட்டடத் தொகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

இதனை யாழ் மருத்துவ பீடாதிபதி இ.சுரேந்திரகுமாரன், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்திய மூர்த்தி, சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பின் பிரதிநிதி வைத்தியர் கா.அருளானந்தம் மற்றும் சுகாதாரத் திணைக்கள அதிகாரி வைத்தியர் சுரங்க தெலமுல்ல ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.



இங்கு சத்திர சிகிச்சை பெற வருப வர்கள் அன்றைய தினமே சத்திர சிகிச்சை செய்யப்பட்டு வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

சிறுநீரக சத்திர சிகிச்சை நிபுணர் பா.பாலகோபி நாள் சத்திர சிகிச்சை செயற்பாடுகள் பற்றி விளக்க உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் வைத்தியர்கள், தாதி உத்தியோஸ்தர்கள், மருத்துவ மாண வர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.